வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu ඊළනාඩු






Email : news@eelanadu.lk மலர் : 03 08.07.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 214 பக்கங்கள் : 16

# குவாட் அமைப்பில் இலங்கையை சேர்ப்பதற்கு அமெரிக்கா முயற்சி!



## போர்க் குற்றம் குறித்தும் இறுதி முடிவு எடுக்க அமெரிக்க செனட் வலியுறுத்து

வாஷிங்டன், ஜூலை 08

பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி இலங்கையை சீனாவுக்கு எதிரான குவாட் அமைப்பில் சேர்ப்பதற்கு அமெரிக்கா முயற்சி செய்கிறது. அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார குழுவின் தலைவர் றொபேட் மெனடீஸ் குவாட் அமைப்பு நாடுகளான அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகியவற்றின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு எழுதிய கடிதம் மூலமே இந்த விடயம் அம்பலமாகியுள்ளது. 15

## நயினாதீவு அம்மன் ஆலய அறங்காவலர் காலமானார்!



யாழ்ப்பாணம், ஜூலை 08

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாக பூசணி அம்மன் ஆலயத்தின் மரபு வழி அறங்காவலரும் வாழ்நாள் தலைவருமான கா. ஆ. தியாகராசா (வயது 84) காலமானார்.

நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் - நல்லூரிலுள்ள அவரின் இல்லத்திலேயே அவர் காலமானார். 15

## வடமராட்சி இளைஞர் டெங்காலேயே மரணம்!

வடமராட்சி, ஜூலை 08

பருத்தித்துறையில் பஸ்ஸிலிருந்து இறங்கிய போது மயங்கி வீழ்ந்து இளைஞர் உயிரிழந்த மைக்கு டெங்கு காய்ச்சலே காரணம் என்று தெரிய வந்துள்ளது.

பருத்தித்துறை - ஆத்தியடியை சேர்ந்த பி. கஜேந்திரன் (வயது 21) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மரணமான இளைஞர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஸில் பருத்தித்துறைக்கு சென்றுள்ளார். அவர் தனது தரிப்பிடத்தில் 15

## எரிபொருள் விநியோக பேச்சு; இலங்கை வந்தது ரஷ்யக் குழு

கொழும்பு, ஜூலை 08

எரிபொருள் விநியோகம் தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக ரஷ்யாவை சேர்ந்த இரு எரிபொருள் நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர்.

இலங்கைக்கு எரிபொருளை ஏற்றுமதி செய்வது குறித்து இந்தப் பிரதிநிதிகள் நாட்டின் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர் என்று அறிய 15

## ஐ. எம். எவ்வுடன் இலங்கை உடன்படிகையை எட்டும்!

### மத்திய வங்கி நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 08

சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ. எம். எவ்.) இலங்கை ஒப்பந்தத்தை எட்டி விடும் என்று மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் நடைமுறையில் தொடர்கின்றன என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நேற்று தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பெரும்பாலான எதிர்பார்ப்புகள் பூர்த்தி 15

## சுகாதார அலுவலர்களுக்கு இன்று எரிபொருள் இல்லை

கொழும்பு, ஜூலை. 08

எரிபொருள் வழங்குவது தொடர்பாக சுகாதார ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்த சிலர் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்குவதை இன்று வெள்ளிக்கிழமை இரத்துச் செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், எரிபொருள் விநியோகிக்கும் திகதி தொடர்பான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அரசாங்கத்துக்கு எதிராக இரவிரவாகப் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 08

அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து மதங்களின் தலைவர்களும் இணைந்து நேற்றிரவு கொழும்பு - கோட்டைப் பகுதியில் சத்தியாகிரகப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி பௌத்த பிக்குகள் உள்ளிட்ட இந்து, இஸ்லாம், 15



## பாண் உற்பத்தி தடைப்படலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 08

பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியாக உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தில் அவர்கள் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

மேலும், 15

## ஐக்கிய மக்கள் சக்தியினருடன் ரெலோ தனித்து சந்தித்து பேச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) எதிர்க் கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவை நேற்று தனியாக சந்தித்துப் பேசியது.

இந்தச் சந்திப்பில் 15

### சர்வகட்சி அரசு குறித்தும் பேசினர்



## வரிசையில் நின்ற இருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 08

நாட்டின் இரு வேறு இடங்களில் பெற்றோலுக்காகக் காத்திருந்த இருவர் நேற்று மரணமாகினர்.

கொழும்பு - பயாகலை ஐ. ஓ. சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலுக்காக காத் 15

# 'கோட்டா உடன் வீட்டுக்குப் போ'

## நாளை நாடெங்கும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை. 08

'கோட்டா உடன் வீட்டுக்குப் போ' என்ற கோஷத்துடன் நாளை சனிக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி நகர்வது, சுற்றிவளைப்பது மற்றும் நாடெங்கும் தமது ஊர்களில் தெருக்களுக்கு வந்து அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என எதிர்க்கட்சிகள், காலி முகப் போராளிகள், சிவில் சமூகத்தினர் ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற கூட்டத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எதிரணி கட்சிகள் சார்பில் கலந்துகொண்ட மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு மேலும் கூறியதாவது: -

"நாடெங்கும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள முழு அடைப்பில் 15

# இப்படியும் நடக்கிறது...!

முல்லா நஸ்ருத்தீன் துருக்கி நாட்டைச் சேர்ந்த ஒரு சிறந்த கவிஞர். நகைச்சுவையாக கதை எழுதுவதிலும் பேசுவதிலும் வல்லவர். இவருடைய இந்த புகழுக்கு அவர் எழுதிய கதைகள் சான்றாகும். இவருடைய கதைகள் யாவும் அவருடைய வாழ்க்கையில் நடந்தவற்றை ஒட்டியதாக இருந்தன.

முல்லா வசித்த ஊரில் நெடுநாட்களாக நீதிபதி பதவிக்கு எவரையும் அந்த ஊரின் மன்னர் நியமிக்கவில்லை. மக்கள் இது குறித்து மன்னரிடம் முறையிட்டனர்.

“தற்பெருமை சற்றும் இல்லாத, அடக்கமான ஒருவரை உங்கள் ஊரில் நீதிபதியாக நியமிக்க எண்ணியிருக்கிறேன். இதுவரை அத்தகைய தகுதி படைத்தவர் என் கண்களில் படவில்லை. அதனால்தான் உங்கள் ஊரில் நீதிபதியாக யாரையும் நியமிக்கவில்லை” என்றார் மன்னர்.

இந்தச் செய்தியை முல்லா அறிந்தார்.

ஒரு நாள் காலையில் முல்லா ஒரு பழைய மீன் பிடிக்கும் வலையை உடலில் போர்த்தியவாறு அரண்மனைப் பக்கமாக நடமாடிக் கொண்டிருந்தார்.

அரண்மனை உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்த மன்னர், முல்லா மீன் வலையை போர்த்திக் கொண்டு உலாவுவது கண்டு ஆச்சரியமடைந்தார். தனது பணியாளன் ஒருவனை அனுப்பி முல்லாவை அழைத்து வரச் சொன்னார்.

“முல்லா, நீர் ஏன் இப்படி மீன் வலையைப் போர்த்திக் கொண்டு உலாவுகிறீர்?” என்று வினவினார்.

“மன்னர் அவர்களே, நான் ஆதி நாளில் மீன் பிடிக்கும் தொழிலைத்தான் செய்து கொண்டிருந்தேன். நான் என்னதான் முல்லா ஆகிவிட்டாலும் பழைய தொழிலை மறக்கலாமா? எந்தத் தொழிலையும் கேவலமாகக் கருதக்கூடாது என்பதற்காக மறுபடியும் மீன் பிடிக்கப் போகிறேன்” என்றார் முல்லா.

இத்தனை காலமாகத் தாம் எதிர்பார்த்த அடக்கமான மனிதர் முல்லாதான் என்று மன்னருக்குத் தோன்றியது.

அதனால் அவரையே மன்னர் நீதிபதியாக நியமித்தார்.

சில நாட்கள் சென்ற பிறகு தெரு வழியாகச் சென்று கொண்டிருந்த முல்லாவை அரண்மனை உப்பரிகையிலிருந்து மன்னர் கண்டார். அவரிடம் மீன் வலை இல்லாததை அவர் கவனித்தார்.

“என்ன முல்லா, மீன் வலையைக் காணோம்” என்று மன்னர் கேட்டார்.

“மன்னர் பெருமானே, மீனைப் பிடித்து விட்ட பிறகு வலை எதற்கு” என்றார் முல்லா. முல்லா மீன் என்று குறிப்பிட்டது நீதிபதி பதவியை. ஆனால், மன்னர் அதைப் புரிந்து கொள்ளவில்லை.

இந்தக் கதைதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

நீதிபதி பதவிக்காக முல்லா மீன்பிடித் தொழிலாளி போல நடித்ததுபோலவே எமது மக்கள் பிரதிநிதிகள் சிலரும் தாங்களும் சாமானியர்கள் போல மக்களுக்கு காட்டத் தொடங்கியிருக்கின்றனர். இது சிலவேளை, அடுத்த தேர்தலிலும் பதவியை பெறுவதற்காக இருக்கலாம்.

மக்கள் ஆயிரம் ரூபாவிற்கு பெற்றோல் பெறுவதற்காக மணித்தியாலக் கணக்கில் வரிசையில் நிற்கின்றனர். குடும்பப் பெண்கள்கூட இதற்கு விதிவிலக்கல்ல.

மணித்தியாலக் கணக்கல்ல, சில வேளைகளில் நாட்கணக்காக காவல் இருக்கவேண்டியும் வந்துவிடுகின்றது.

நண்பர் ஒருவர், ஈழவிடுதலைப் போராட்டத்தில் தலையில் சூடுபட்டு விழுப்புண் அடைந்தவர். இதனால், அவரால் மோட்டார் சைக்கிளையோ, சைக்கிளையோ ஓட்ட முடியாது. “ஓட்டமற்றிக்“ கார் மட்டுமே அவரால் இயக்கமுடியும். தனது காருக்கு பெற்றோல் நிரப்புவதற்காக இரண்டு நாட்கள் வரிசையில் நின்று, இரண்டாயிரம் ரூபாவிற்கு பெற்றோல் அடிக்க முடிந்ததாக கூறினார். இரண்டு நாட்களும் வரிசையில் நின்ற தனது காரை ஒவ்வொரு தடவையும் “ஸ்ராட்“ செய்து பின்னர் நகர்த்தி, பின்னர் “ஸ்ராட்“ பண்ணி நிறுத்தி பெற்றோல் நிலையம் செல்வதற்கே இரண்டு லீட்டர் பெற்றோல் செலவாகியிருக்கலாம்.

இரண்டாயிரம் ரூபாவிற்கு பெற்றோல் அடித்து, அடுத்த நாள் திரும்பவும் வரிசையில் நிற்கவேண்டியிருக்கின்றது என்று சினந்து கொண்டார். மின்சாரத்தில் இயங்கக்கூடிய மூன்றுசில்லு சைக்கிள் ஒன்றை எப்படிப் பெறுவது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றார்.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பெற்றோல் விநியோகிப்பதற்காக கொழும்பில் தனியான எரிபொரு விற்பனை நிலையம் உண்டு. எரிபொருள் அவர்களுக்கு தாராளமாக கிடைக்கின்றது.

இந்நிலையில் ஓர் எம்.பி. மோட்டர் சைக்கிளில் யாழ்ப்பாண வீதிகளில் புகைப்படத்திற்கு “போஸ்“ கொடுக்கிறார். அந்த மோட்டார் சைக்கிளுக்கு சிறிய கார் ஒன்றுக்கு தேவையான பெற்றோலைவிட அதிகம் தேவையாக இருக்கும். அத்தனை பெரிய மோட்டார் சைக்கிள் அது.

அது மாத்திரமல்ல, அவர் ஒரு மோட்டர் சைக்கிளில் செல்ல, அவரது பாதுகாவலர்கள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் செல்கின்றனர்.

அவர் தனது “பிக்அப்பில்“ போயிருந்தால் எல்லோருமே ஒரு வாகனத்தில் சென்றிருக்கலாம். மூன்று மோட்டார் சைக்கிள்களுக்கு செலவான பெற்றோலைவிட, அந்த வாகனத்திற்கு குறைவான பெற்றோலே தேவையாக இருந்திருக்கும்.

இன்னுமொருவர், தனது காரை வீட்டில் வைத்துவிட்டு, மின்சாரத்தில் இயங்கும் சிறிய ரக சைக்கிளில் வீதியில் செல்ல, அதனை வீடியோ எடுத்து பகிர்ந்துகொண்டிருக்கின்றார்கள் அவரின் தொண்டர்கள்.

எல்லாம் நல்லதுதான். ஆனால், நீங்கள் மின்சாரத்தில் இயங்கும் சைக்கிள்களை எங்கே வாங்கினீர்கள்?அதனை சாதாரண மக்களும் வாங்குவது எப்படி என்பதையல்லவா மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் மக்களுக்கு சொல்லவேண்டும். அதைவிடுத்து, தாங்கள் ஓடித்திரிந்து மக்களுக்கு ஏதோ பணியாற்றுவதுபோல காட்டத்தான் வேண்டுமா என்று கேட்காமல் இருக்கவும் முடியவில்லை.

மக்கள் பிரதிநிதிகள் என்போர், இவ்வாறாக நெருக்கடியான நேரத்தில் மக்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று ஆலோசனை சொல்ல வேண்டுமே தவிர, தாங்களும் நிலைமைக்கு ஏற்றவாறு மாறிவிட்டோம் என்று காட்டுவதல்ல மக்கள் பிரதிநிதிகளின் பணி.

ஆகக்குறைந்தது, மக்களை மோட்டார் சைக்கிள்களுக்கு பதிலாக, சைக்கிள்களை பாவிக்கச் சொல்லியாவது அவர்களை தூண்டுகின்ற வகையில் சைக்கிள்களிலாவது ஓடித்திரியலாம். அதைவிடுத்து, சொகுசு வாகனங்களுக்கு பதிலாக மோட்டர் சைக்கிள்களில் செல்வதல்ல, மக்கள் பிரதிநிதிகளின் பணி.

**- ஊர்க்குருவி**

# வடமராட்சி பாடசாலைகளுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்கு!

வடமராட்சி, ஜூலை 08

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிகளில் கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்களின் வசதி கருதி, பாடசாலை நாட்களில் மட்டும் அந்தப் பாடசாலைகள் ஊடாக விசேட பஸ் சேவையை இ. போ. ச. பருத்தித்துறை சாலை நடத்தவுள்ளதாக அந்தச் சாலையின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து காலை 6.45 மணிக்கு புறப்படும் பஸ் மந்திகை - மாலை சந்தி - வதிரிச் சந்தி, மகாவித்தியாலய வீதி வழியாக நெல்லியடி பஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து மானிப்பாய் - நவாலி நோக்கிப் பயணிக்கும்.

இதேபோல, யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து நெல்லியடி ஊடாக பருத்தித்துறை நோக்கி வரும் பஸ் நெல்லியடி பஸ் நிலையத்தை வந்தடைந்ததும் அங்கிருந்து மகா வித்தியாலய வீதி - வதிரிச்சந்தி, மாலை சந்தி - மந்திகை ஊடாக பருத்தித்துறையை சென்றடையும்.

பாடசாலை நாட்களில் இந்த பஸ் சேவைகளை குறித்த பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர களை பயன்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# போதைப் பொருள் கடத்தல் யாழ். நகரில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ்ப்பாணம் மாநகரில் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் கொண்டு சென்ற ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரின் மானிப்பாய் வீதி சத்திரச்சந்திக்கு அண்மையில் வைத்து நேற்று மாலை சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

யாழ்பாணம் குருநகர் ஐந்துமாடி பகுதியைச் சேர்ந்த 46 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வு பிரிவினரின் உதவியுடன் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உள்படுத்தப்பட்டுள்ளார். (ஐ-3)

# 300 லீற்றர் டீசல் பதுக்கல் யாழ். நகரில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 08

யாழ்ப்பாணம் மாநகரில் சுமார் 300 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 3 பரல்களில் பதுக்கி வைக்கப்பட்ட டீசல் கைப்பற்றப்பட்டது. இந்த எரிபொருளை அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் அவர் பதுக்கி வைத்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-3)

# அதிகூடிய விலைக்கு எரிபொருள் விற்பனை

## நான்கு பேர் கைது

கொழும்பு, ஜூலை. 08

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகூடிய விலைக்கு எரிபொருட்களை விற்பனை செய்த நான்கு பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை-ஹபரணை பிரதான வீதியின கல்ஓயா பகுதியில் சந்தேகத்திற்கிடமான வாகனம் ஒன்றை பொலிஸார் சோதனையிட்டபோது, அதிலிருந்து 100 லீற்றர் டீசல் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் கைதானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் ஒரு லீற்றர் டீசலை 1,100 ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச.நவநீதன் “நன்றி மறப்பது நன்றன்று“ என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

■ ■ ■

யாழ்ப்பாணம், ஜூன் 24

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன்ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 28ஆவது சொற்பொழிவு நிகழ்வு யா/தொண்டைமானாறு ஞானக்கண்மணி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இதில், “நாவலர் பெருமானின் நூல் பணிகள்” எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் செ.கந்த. சத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 08

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் நெருக்கடிகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி - பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு. சேவற்கொடியோன் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
08.07.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆணி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மாற்றம்?

இலங்கை தீவில் அனைவரும் மாற்றமொன்றை எதிர்பார்க்கின்றனர். அது எவ்வாறான மாற்றம் என்பதில் தெளிவான புரிதல்கள் இல்லாவிட்டாலும்கூட, மாற்றமொன்று தேவையென்னும் புரிதல் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இதன் தாக்கமே அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்துக்கான ஆதரவு அதிகரிப்பதற்கான காரணமாகும்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக கடுமையாக உழைத்தவர்கள் பலர், அவர் அதிகாரத்திலிருந்து வெளியேற வேண்டுமென்றே வலியுறுத்தி வருகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவும் வெளியேற வேண்டுமென்றும் சிலர் வலியுறுத்துகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், போராட்டத்திற்கான ஒன்றிணைந்த பிரகடனம் வெளியிடப்பட்டிருக்கின்றது. படித்த சிங்களவர்கள் மத்தியில் மாற்றத்தின் தேவை பரவலாக உணரப்படுகின்றது. ஏனெனில், மாற்றமொன்றை எதிர்பார்த்தே சிங்கள மத்தியதர வர்க்கம் கோட்டாபய ராஜபக்ஷவின் பின்னால் அணிதிரண்டது.

ரணில் – மைத்திரி ஆட்சியின் குழப்பங்களும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும் இதில் பிரதான செல்வாக்குச் செலுத்தியது. ஆனால், கோட்டாபயவின் ஆட்சி அவர்களுக்கு இப்போது சாபமாக மாறியிருக்கின்றது. இந்த நிலையில்தான், சிங்கள மத்தியதர வர்க்கம் மாற்றமொன்றுக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றது. அரசியல் மாற்றங்களுக்கான விதைகள் மத்தியதர வர்க்கத்திற்குள்தான் வேரூன்றுவதுண்டு. மத்தியதர வர்க்கத்தை ஆட்கொள்ளாத எந்தவொரு போராட்டமும் அடுத்த கட்டத்துக்கு செல்வது கடினம். ஆனால், தற்போது அவ்வாறானதொரு சூழல் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த மாற்றம் சிங்களவர்களுக்கான மாற்றம் மட்டும்தான். தமிழர்கள் தொடர்பான நிலைப்பாடுகளில் எவ்விதமான முன்னேற்றகரமான மாற்றங்களையும் தென்னிலங்கையின் போராட்டங்கள் ஏற்படுத்தாது. இதுவரையில் அவ்வாறான நம்பிக்கைகள் தென்படவில்லை.

இவ்வாறானதொரு சூழலில் தமிழ் அரசியல் சமூகம் என்ன செய்யப் போகின்றது? எவ்வாறான மாற்றம் தொடர்பில் உரையாடிக் கொண்டிருக்கின்றது? ஆகக் குறைந்தது, அவ்வாறானதோர் உரையாடல் தேவையென்னும் அடிப்படையிலாவது, ஏதாவது முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றனவா? தமிழ் மத்தியதர வர்க்கம் விழித்துக் கொள்ள வேண்டிய வேளை வந்துவிட்டது! எதிர்கால சவால்களை எதிர்கொள்ள முடியாத அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தொடர்பில் இறுதி முடிவெடுக்க வேண்டிய வேளை நெருங்கிவிட்டது. அவர்கள் அரசியலிலிருந்து ஒதுங்கி, புதியதோர் அரசியல் செல்நெறிக்கான பாதையை காண்பிப்பதுதான், தமிழர்கள் மத்தியில் நிகழ வேண்டிய மாற்றமாகும்.

தமிழ் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்னைகளை தான் அவதானித்து கொண்டிருக்கிறார் எனவும், தீர்வுகள் தொடர்பில் சர்வதேச சமூகத்துடன் பேசிக் கொண்டிருக்கிறார் என்றும் கூட்டமைப்பின் பாராமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிக்கின்றார். சர்வதேசம் தீர்வை பெற்றுத்தரும் என்றவாறு கூறிக் கொண்டு, இன்னும் எத்தனை காலத்துக்கு தமிழர் சமூகம் அரசியலை முன்னெடுக்கப் போகின்றது? தனது சொந்த பலத்தை அடையாளம் கண்டு, தன்னை அனைத்து வழிகளிலும் பலப்படுத்திக் கொள்ளாத சமூகங்கள் வெற்றிபெற்றதாக வரலாறு இருக்கின்றதா? பாராளுமன்ற பதவியை ஒரு தொழிலாகக் கருதிக் கொள்ளும் அரசியல்வாதிகள் தொடர்பில் தமிழ் மத்தியதர வர்க்கம் எப்போது தங்களுக்குள் சிந்திக்கப் போகின்றது?

மாற்றமொன்று தொடர்பில் இனியும் தாமதிக்காத வகையிலான அரசியல் உரையாடலொன்று தமிழ் சமூகத்திற்கு தேவை. சமஷ்டி, சுயநிர்ணய உரிமை, அதற்கும் மேல் பிரிந்து செல்வதற்கான சர்வசன வாக்கெடுப்பு போன்ற, சுலோகங்களை வெறுமனே உச்சரித்துக் கொண்டிருப்பது அரசியல் அல்ல. அவைகள் வெறும் தனிப்பட்ட ஆசைகள் மட்டுமே! ஆசைகளை, அரசியலாகக் கருதிக்கொள்ளக் கூடாது. அரசியல் வெற்றிகளுக்கு தேவை ஒரு கட்டுறுதிமிக்க அரசியல் சமூகமாக திரட்சி பெறுவதுதான். ஒரு கட்டுறுதிமிக்க அரசியல் சமூகத்திலிருந்துதான், தூரநோக்குடன் சிந்திக்கும் திறமையான அரசியல் தலைவர்கள் உருவாக முடியும். இன்று தமிழ் சமூகத்தால் திறமையான அரசியல் தலைவர்களை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. இதற்கு காரணம் தமிழ் சமூகத்தில் மாற்றம் ஒன்றுக்கான தேடல் இல்லை. அதற்கான விழிப்புணர்வு இல்லை. அதற்கான உழைப்பு இல்லை. இவைகள் எதுவுமில்லாத போது, வெறும் சுலோகங்களே அரசியலாக காட்சிப்படுத்தப்படும். அதுதான், இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. களத்திலும் இதுதான் நிலைமை் புலத்திலும் இதுதான் நிலைமை.

# அரசியல் வானில் ஒரு துணிகர ‘தாரகை’!



- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையில் இன்று நிலவி வருகின்ற அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக ஓங்கிக் குரல் கொடுத்துவரும் துணிகர பெண்ணாக ஹிருணிகா பிரேமசந்திர காணப்படுகின்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் காலஞ்சென்ற அரசியல்வாதியுமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வியான ஹிருணிகா இலங்கையில் தற்போது பலதரப்பட்ட நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்ட - குறிப்பாக பொருளாதார ரீதியாக பாதிப்புற்ற மக்களின் குரலாக தலைநகரில் ஒலித்து வருகின்றார்.

ஹிருணிகா நேற்று முன்தினம் கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ வாசஸ்தல வாசலில் நின்று அவரை வெளியே வந்து மக்கள் படுகின்ற கஷ்டங்களை பார்வை யிடுமாறு தனது ஆதரவாளர்கள் சகிதம் சென்று குரல் எழுப்பியிருந்தார்.

இதற்கு முன்பதாக பிரதம மந்திரி ரணில் விக்கிமரசிங்கவின் பிரத்தியேக வாசஸ்தலம் முன்பாகவும் சென்று ரணிலை வெளியே வருமாறும் அவரை மக்களுக்கு துரோக மிழைத்த ஒரு பேர்வழி எனவும் ஹிருணிகா குரல் எழுப்பியிருந்தார்.

தமது கணவன்மார் கொலையுண்டதையடுத்து அரசியலுக்கு வந்தவர்களே சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய பெண் அரசியல்வாதிகளாவர்.

முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க,1958ஆம் ஆண்டு கொலையுண்டதையடுத்து அவரது மனைவியார் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசியலுக்கு வந்து உலகின் முதலாவது பெண் பிரதமராகவும் தெரிவானார். இதனையடுத்து அவரின் புதல்வியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவரின் கணவர் விஜய குமாரதுங்க கொலையுண்டதையடுத்து அரசியலில் பிரவேசித்து பிரதமர், ஜனாதிபதி பவிகளை வகித்திருந்தார். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசியலில் பெண்கள் பலர் இருந்து வருகின்றனர். ஆயினும், அவர்களில் ஆளுமையுள்ளவர்களாக மிகச்சிலரே இருக்கின்றனர். ஆனால், தற்போது தமது தந்தையாரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவை தமது சிறு வயதில் பறிகொடுத்த ஹிருணிகா இலங்கை அரசியலில் ஒரு முக்கிய கதாபாத்திரமாக வெளிப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஹிருணிகாவின் தந்தையார் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர அவரின் அரசியல் எதிரிகளால் கொலையுண்டிருந்தார். சிறிமாவோ, சந்திரிகா ஆகியோரைப் போன்று அவர்களின் கணவன்மாரின் அகால மரணங்களையடுத்து அரசியலில் நுழையாது தமது தந்தையாரை பறிகொடுத்த நிலையில் அரசியலுக்கு வந்தவராக இருக்கின்றார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர.

இலங்கையில் மட்டுமல்ல. சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் தற்போது பெற்றுள்ளார் ஹிருணிகா பிரேமசந்திர. ஏனெனில், இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி குறித்து சர்வதேச சமூகம் தனது பார்வையைச் செலுத்தியுள்ளது. எதிர் தரப்பி லிருந்து வரக்கூடிய விமர்சனங்கள், கண்டனங் களை ஒடுக்குவதில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. இதன் ஒரு நடவடிக்கையாகவே ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில்விக்கிரமசிங்க அரச தரப்பில் பிரமதராக உள்வாங்கப்பட்டுள்ளார்.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பற்ற ஓர் அரசியல்வாதி என்றே அரசியல் விமர்சகர்களால் வர்ணிக்கப்பட்டுள்ளார். இதுவரை அவர் போட்டியிட்ட ஜனாதிபதி தேர்தல்களில் வெற்றிபெற முடியாதவராக இருப்பதோடு தமது ஐக்கிய தேசிய கட்சியையும் தாழ்வு நிலைக்கு ரணல் விக்கிரமசிங்க கொண்டுசென்றுள்ளார் என்பதே பரவலான குற்றச்சாட்டாகும்.

ஏற்கனவே, ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தி என்ற புதிய கட்சியை உருவாக்கியுள்ளார் ஐக்கிய தேசிய கட்சியின் தூண்களில் ஒருவராக இருந்தவரும் மறைந்த ஜனாதிபதியுமான ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வரான எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ. இந்தக் கட்சியின் மகளிர் பிரிவு தலைவியாக இருப்பவர் ஹிருணிகா பிரேமசந்திர.

ஹிருணிகா தமது ஆர்ப்பாட்டங்களை தொடர்ச்சியாக தற்போது நடத்தி வருகின்ற நிலையில் தமது ஆர்ப்பாட்டங்களின்போது எதிர்ப்படும் பொலிஸ் அதிகாரிகளையும் அரவணைத்து அவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாத விதத்தில் நடந்து வருகின்றார். மிகவும் கண்ணியமான மூன்று பிள்ளைகளின் தாயான ஹிருணிகாவை சில வாரங்களுக்கு முதல் மிகக்கேவலமான முறையில் அவரின் உடல் பாகங்களைக்கூட விமர்சித்து கீழ்த்தரமான அரசியலை அவருக்கு எதிரானவர்கள் நடத்தினர். ஆனால், மட்டரகமான விமர்சனங்களை கண்டு பின்வாங்கிவிடாது “கண்டதே காட்சி கொண்டதே கோலம்“ என்ற வகையில் ஒரு துணிகரப் பெண்ணானகமிளிர ஆரம்பித்திருக்கும் ஹிருணிகா தமது பாதுகாப்பிலும் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டுமென்று அவரின் நடவடிக்கைகளால் கவரப்பட்டவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தலைநகரில் ஒரு சூறாவளி போன்று வீச ஆரம்பித்திருக்கும் ஹிருணிகாவின் அரசியல் எதிர்காலம் பிரகாசமாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜூலை - 08 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 24
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி




**மேடம்**
நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். தடைகளை விலக்கி செயல்படுவீர்கள். உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**இடபம்**
சொத்து வாங்கும் முயற்சி தள்ளிப்போகும். பெற்றோரின் ஆதரவால் நிதிநிலை உயரும். குடும்பத்தினரின் நலனில் அக்கறை கொள்வீர்கள். பிள்ளைகள் வழியே ஆதாயம் காண்பீர்கள்.

**மிதுனம்**
அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயத்தை உண்டாக்கும். உங்கள் கோரிக்கை நிறைவேறும். முயற்சியின் வழியே பலன் அடைவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். செல்வீர்கள்.

**கடகம்**
துணிச்சலுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். பொதுநல முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். மற்றவர்களின் பாராட்டிற்கு ஆளாவீர்கள்.

**சிம்மம்**
கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். வருமானத்திற்கான முயற்சி லாபமாகும்.

**கன்னி**
வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். உங்களது எண்ணம் பூர்த்தியாகும் நாள். நீங்கள் ஈடுபடும் செயலில் வெற்றி அடைவீர்கள்.

**துலாம்**
வெளியூர் பயணமும், அலைச்சலும் ஏற்படும். முயற்சிகள் தாமதமாகும். விரும்பிய செயல்களில் தடையும் தாமதமும் ஏற்படும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு அழைப்பு வரும். நீண்ட நாள் முயற்சி ஒன்று நிறைவேறும்.

**தனுசு**
நேற்றைய நிலையே இன்று நீடிக்கும். தொழிலில் எதிர்பார்த்த வருமானம் உண்டாகும். கவனமாக செயல்பட வேண்டிய நாள். வழக்கமான வருமானம் தடையின்றி வரும்.

**மகரம்**
இழுபறியாக இருந்த ஒரு செயல் இன்று நிறைவேறும். எதிலும் பலமுறை யோசித்து செயலபடுங்கள். அவசர செயல்கள் பிரச்னையில் முடியும். நிதிநிலை சீராகும்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். பணிகளிலும் விழிப்புணர்வு அவசியம். வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. எதிர்பார்ப்புகள் இழுபறியாகும். பிறரது பிரச்னையில் தலையிட வேண்டாம்.

**மீனம்**
உற்சாகம் அதிகரிக்கும். நீங்கள் விரும்பியவற்றை அடைவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணியிடத்தில் செல்வாக்கு உயரும். கவனத்துடன் செயல்பட்டு விரும்பியதை அடைவீர்கள். முயற்சி லாபமாகும்.

# பழனிசாமி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தள்ளுபடி

சென்னை, ஜூலை 08

பொதுக் குழு விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி மீது தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய் துள்ளது.

அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் கடந்த 23ஆம் திகதி சென்னை வானகரத்தில் நடைபெற்றது. இதில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஒப்புதல் அளித்த 23 தீர்மானங்களை தவிர வேறு தீர்மானங்கள் நிறைவேற்றக் கூடாது என சென்னை உயர்நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

இந்தப் பொதுக்குழுவில், 23 தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. மேலும், அ. தி. மு. க. அவைத் தலைவராக தமிழ்மகன் உசைன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்துடன், அடுத்த பொதுக்குழு வரும் ஜூலை 11இல் நடைபெறும் என தமிழ் மகன் உசைன் தெரிவித்தார்.

தீர்மானங்களை நிராகரித்தது மற்றும் அவைத்தலைவர் தேர்வு உள்ளிட்டவை நீதிமன்று அவமதிக்கும் செயல் என பன்னீர்செல்வம் தரப்பு குற்றம் சாட்டியது. அத்துடன், நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடர்ந்தது.

நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளதாகக் கூறி தள்ளுபடி செய்தது சென்னை உயர் நீதிமன்றம். (ஐ)

# நடிகர் சிவாஜியின் சொத்துக்களை பிரிப்பதில் வாரிசுகளிடம் பிரச்னை!

சென்னை, ஜூலை 08

நடிகர் பிரபு மற்றும் அவரின் சகோதரர் ராம்குமாருக்கு எதிராக அவர்களின் சகோதரிகள் உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

நடிகர் திலலகம் சிவாஜி கணேசனின் மகனும் பிரபல நடிகருமான பிரபு மற்றும் அவரது மூத்த சகோதரர் ராம்குமார் ஆகியோருக்கு எதிராக அவர்களின் சகோதரிகள் சாந்தி, ராஜ்வி ஆகியோர் உயர்நீதிமன்றில சிவில் வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில், தங்களுக்கு தெரியாமல் சில சொத்துக்களை நடிகர் பிரபு, அவரின் சகோதரர் ராம்குமார் ஆகியோர் விற்று விட்டனர் என்றும், மேலும் சில சொத்துக்களை அவர்களின் மகன்களின் பெயருக்கு மாற்றம் செய்து விட்டனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், பிரபு மற்றும் ராம்குமார் ஆகியோர் ஜோடிக்கப்பட்ட உயில் ஒன்றை தயாரித்து, தங்களை ஏமாற்றி விட்டனர் என்றும், அவர்களின் சகோதரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். ஆகையால், இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட்டு தங்களுக்கு உரிமையான சொத்துக்களை மீட்டுத் தர வேண்டும் என்றும் அவர்களின் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# இரட்டை இலை முடக்கக் கோரிய வழக்கு அபராதத்துடன் தள்ளுபடி!

சென்னை, ஜூலை 08

அ. தி. மு. கவின் இரட்டை இலை சின்னத்தை முடக்கக் கோரிய வழக்கை அபராதத்துடன் சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அ. தி. மு. கவில் ஒற்றைத் தலைமை பிரச்னை விஸ்வரூபம் எடுத்து வரும் நிலையில், அந்தக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் ஜூலை 11ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது. இந்தப் பொதுக் குழு கூட்டத்துக்கு தடை விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்யுமாறு பன்னீர்செல்வம் தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அ. தி. மு. கவின் இரட்டை இலை சின்னத்தை முடக்க வேண்டும் என அந்தக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்தார்.

இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது.


வழக்கை விசாரித்த நீதிபதிகள், விளம்பர நோக்கத்துடன் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகக் கூறி மனுதாரருக்கு 25, 000 இந்திய ரூபாய் அபராதம் விதித்து வழக்கை தள்ளுபடி செய்யப்பட்டது. (ஐ)

# மாநிலங்களவை எம். பியானார் இசையமைப்பாளர் இளையராஜா!

புதுடில்லி, ஜூலை 09

மாநிலங்களவை நியமன உறுப்பினராக இசையமைப்பாளர் இளையராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் 12 உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்கள். அந்தவகையில், தற்போது இசையமைப்பாளர் இளையராஜா, தடகள வீராங்கனை பி. டி. உஷா ஆகியோருக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது.



இதனை பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிற்றரில் உறுதிப்படுத்தியுள்ளார். அதில், “பல தலைமுறைகளாக பல்வேறு தரப்பட்ட மக்களைக் கவர்ந்தவர் இளையராஜா. அவரின் பாடல்களில் பலவிதமான உணர்வுகள் வெளிப்பட்டுள்ளன. பலருக்கு ஊக்கமளிக்கும் வகையிலான வாழ்க்கை முறையைக் கொண்டவர். எளிமையான பின்னணியிலிருந்து வந்து மிகப்பெரிய சாதனைகளைப் படைத்தவர். அவர் மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.”, என்று குறிப்பிட்டுள்ளார்.

இசையமைப்பாளர் இளையராஜா தற்போது அமெரிக்காவில் உள்ளார். கடந்த சில நாள்களுக்கு முன்பு, பிரதமர் மோடி குறித்த புத்தகத்தின் முன்னுரைக்கு அம்பேத்கருடன் மோடியை ஒப்பிட்டு இளையராஜா முன்னுரை எழுதியிருந்தார். இது நாடு முழுவதும் பேசுபொருளானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆபத்தான கட்டம் நோக்கி நகர்ந்து வருகிறது இலங்கை

## இந்தியாவின் மூத்த ராஜதந்திரி கருத்து

புதுடில்லி, ஜூலை 08

**அரசியல் ஸ்திரமரற்ற நிலைமையின் காரணமாக, இலங்கை ஆபத்தான கட்டத்தை நோக்கி பயணிப்பதாக, இலங்கை விடயங்களில் நீண்ட அனுபவமுள்ள இந்தியாவின் மூத்த ராஜதந்திரியான கே.பி.பேபியான் அச்சம் வெளியிட்டிருக்கின்றார்.**

இலங்கை மக்கள் துன்பப்படுவது கவலையளிப்பதாக குறிப்பிட்டிருக்கும் அவர், இலங்கையில், பொருளாதார மீட்சியை ஏற்படுத்தும் நோக்கில், பி-5 நாடுகள், ஜி-20 நாடுகள், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கி ஆகிய வற்றை உள்ளடக்கி, சர்வதேச மகாநாடு ஒன்றிற்கு இந்தியா தலைமை யேற்றிருக்கவேண்டுமென்று, தான் விரும்புவதாகவும், அவர் தெரிவித்திருக்கின்றார். திருகோணமலையை தளமாகக் கொண்டியங்கிவரும் மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையத்திற்கு வழங்கிய நேர்காணலின் போதே, அவர் மேற்படி கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை விடயத்தில் சீனா விரைந்து செயற்படாதது விசித்திரமாக இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் இந்திய ராஜதந்திரி, சிந்திக்காமல் மேற்கொள்ளப்படும் சீனாவின் திட்டங்களும் இவ்வாறான பொருளாதார நெருக்கடியின் ஒரு பகுதியாக இக்கின்றது. சீனாவின் ஒரு பாதை ஒரு வலயம் திட்டத்திற்குள் உள்ளடங்கும் நாடுகளில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் முதல் நாடு இலங்கையல்ல. இந்த விடயத்தை கருத்தில் கொண்டே சீனாவும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கின்றது. பாக்கிஸ்தானின் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கும், சீனா அதிகம் உதவவில்லையென்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டுமென்றும் பேபியான் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போது, அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். - தமிழர் பிரச்சனையில், சிங்கள பெரும்பான்மையினருக்கு வெறுப்பு ஏற்படாத வகையில் இந்தியா தலையீடு செய்ய முடியும், ஆனால், தற்போதைய இந்திய அரசாங்கத்திற்கு அவ்வாறான ராஜதந்திர செல்வாக்கும் திறமை யும் உள்ளதாக எனக்கு தெரியாது எனவே இந்தியாவின் தலையீட்டை நான் முன்மொழியவில்லையென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். (அ)

# யாழ். நகரில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூலை08

யாழ்ப்பாண நகரில் அண்மைக்காலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் நேற்று யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து சந்தேக நபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஆறு சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட சைக்கிள்களின் இலக்கம் தொடர்பில் தற்போது வரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் எதுவும் பதியப்படவில்லை.

எனவே யாழ்ப்பாண நகரப் பகுதியில் சைக்கிள்களை பறிகொடுத்தவர்களை யாழ்ப்பாண பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நேற்றுமுன்தினம் மதியம் யாழ். நகரப் பகுதியில் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை தொடர்பில் திருடப்பட்ட இடத்துக்கு அருகில் இருந்த கடை ஒன்றின் சி.சி.ரி.வி கமெராவின் உதவியுடன் சைக்கிள் திருடியவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது அவரிடமிருந்து 6 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இன்று நண்பகல் முதல் பணிப்புறக்கணிப்பு!

## போக்குவரத்து சபை தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை08

தங்களின் போக்குவரத்துக்கு எரிபொருள் வழங்கப்படாவிட்டால், இன்று நண்பகல் முதல் கடமைக்கு செல்லப்போவதில்லை என இலங்கை போக்குவரத்து சபை தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது.

அகில இலங்கை போக்குவரத்து சேவையாளர் சங்கத்தின் தலைவர் சேபால லியனகே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பல மாதங்களுக்கு முன்பே இந்த விடயம் தொடர்பில், அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டபோதிலும், எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

எனவே, இலங்கை போக்குவரத்து சபையின் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாவிட்டால், இன்று மதியம் 12 மணிமுதல் சேவைக்கு சமுகமளிக்கப்போவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# எரிபொருள் வரிசையில் காத்திருந்த மேலும் இருவர் பரிதாப உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 08

பம்பலப்பிட்டி மற்றும் பயாகல பகுதிகளில் எரிபொருளுக்காக வரிசைகளில் காத்திருந்த வயோதிபர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பம்பலப்பிட்டி ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்ற 60 வயதான ஒருவர் திடீரென சுகயீனமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு சேர்க்கப்பட்டார். குறித்த நபர் நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

புத்தளம் - மதுரங்குளி பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், இராஜகிரிய - ஒபேசேகரபுர பகுதியிலுள்ள தமது மகளுடன் வசித்து வந்த நிலையில், நேற்று முன் தினம் இரவு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காகச் சென்றுள்ளார்.

இவரின் ஜனாஸா கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வெலிக்கடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, பயாகல பகுதியில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த 63 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எரிபொருள் வரிசையில் காத்திருந்தபோது திடீர் சுகயீனமுற்ற நிலையில் களுத்துறை - நாகொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர், நேற்று அதிகாலை உயிரிழந்தார்.இந்த இரு மரணங்களுடன் எரிபொருள் வரிசைகளில் பதிவாகிய மரணங்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# ஒரு லீற்றர் எரிபொருளை 250 ரூபாவிற்கு விற்கலாம்

## கோப் குழுவில் ஜனக ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 08

ஒரு லீற்றர் எரிபொருளை 250 ரூபாவிற்கு வழங்க முடியும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே ஜனக ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் பார்த்தபோது இங்கு ஏதோ தவறு இருப்பதை உணர்ந்தோம். இந்த எண்ணெய் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படுகிறது. இது தொடர்பில் ஆராய்ந்த போது அமைச்சர் முன்வைத்த விலைச் சூத்திரம் எவ்வித அடிப்படையுமின்றி முன்வைக்கப்பட்டுள்ளதை உணர்ந்தோம்.

அமைச்சர் மஹிந்த அமரவீர - அமைச்சரா தயாரித்துள்ளார் அல்லது அமைச்சு அதிகாரிகளா?

"அது எனக்கு தெரியாது. அமைச்சர்தான் ருவீட் செய்தார். அவருடைய ட்விட்டரில் இருந்துதான் நான் பெற்றேன். எமக்கு முழுமையான தரவு கிடைத்தது. இறக்குமதி செலவு மற்றும் வரி ஆகியவற்றைக் கண்டுபிடித்தோம். இரண்டுக்கும் இடையே பொதுவாக 150-200 ரூபாய் வித்தியாசம் இருக்கும். அப்படியாயின், எமக்கு டீசல் இறக்குமதி செய்வதற்கான அடிப்படை செலவு குறிப்பிட்டுள்ள மதிப்பு 174 டொலர்களாகும். ஆனால் தரவுகளைப் பார்க்கும்போது, இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயின் விலை 174 டொலர் அல்ல. இறக்குமதி செய்யப்பட்ட விலை 100 - 110 டொலர்களாகும். ஐ.ஓ.சி ஜூலை 1 அன்று ஒரு தொகுதி டீசலைக் கொண்டு வந்துள்ளது. உண்மையில், எரிபொருள் இறக்குமதி செலவு 350 ரூபாவுக்கு அதிகமாகாது. இது பொய்யல்ல. கோப்புகளில் உள்ள உண்மைக் கதை."

அமைச்சர் மஹிந்த அமரவீர - அப்படியாயின் 250 ரூபாய்க்கு குறைவாகவா கொண்டு வரப்பட்டுள்ளது?

"இப்போது எங்கள் பிரச்னை என்னவென்றால், / பர்னஸ் ஒயிலின் செலவு 171 ரூபாய். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதை மின்சார சபைக்கு 419 ரூபாய்க்கு கொடுக்கிறது. அவர்கள் ஒரு லிட்டருக்கு 250 ரூபாய் வசூலிக்கிறார்கள்."

அமைச்சர் மஹிந்த அமரவீர - சாதாரண மக்களுக்கு தேவையாக உள்ளது டீசல், பெற்றோல் தானே? 250 ரூபாய்க்கு வழங்க கூடியதாக இருக்கும் போது 400 ரூபாய்க்கு வழங்குவதாகதானே தாங்கள் சொல்கிறீர்கள். ?

"ரூ. 400 - ரூ. 450 என்று யாராவது சொன்னால் அது பொய். இது ஒரு உண்மைக் கதை, நான் உங்களுக்கு சொல்கிறேன், இறக்குமதியின் செலவு ரூ. 200 ஆக இருக்கும்போது எப்படி 400 ரூபா ஆகும். அப்படி நடக்க முடியாது. வரி செலுத்திய பிறகு. , ஒவ்வொரு எரிபொருள் விலையும் ரூ.250, ரூ.170, ரூ.180. ரூ.220. இந்த உண்மைக் கதை கடந்த வாரம் வரையானது. இந்த சூத்திரம் முழுவதுமாக பிழையானது. இது நடந்துள்ளது. தரவுகளை வழங்கியுள்ளேன்-என்றார்.

குறைந்த விலையில் ஒரு லீற்றர் எரிபொருளை வழங்கும் முறை தொடர்பில் வினவிய போதே ஜனக ரத்நாயக்க இதனை விளக்கினார். (அ)

# பணவீக்கம் 70 சதவீதம் வரை அதிகரிக்கும் அபாய நிலைமை

## மத்திய வங்கியின் ஆளுநர் தகவல்

கொழும்பு, ஜூலை 08

தனது கணிப்பின் படி பணவீக்கம் மேலும் அதிகரிக்கக் கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.அதன்படி, எதிர்வரும் சில மாதங்களினுள் பணவீக்கம் 70 சதவீதம் வரை அதிகரிக்கக் கூடும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போது மேற்கொண்டுள்ள கொள்கை அடிப்படையிலான செயற்பாடுகள் காரணமாக எதிர்வரும் 2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதலே பணவீக்கம் பாரியளவில் குறைவடைக்கூடும் என வும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோல், உலகளவிலான எரிபொருள் விலை மற்றும் உணவுப் பொருட்களின் விலைகளின் வீழ்ச்சி தொடர்பி லான அனுமானங்கள் இந்த கணிப்பில் அடங்குவதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்நாட்டு அந்நிய செலாவணியை வலுப்படுத்துவற்காக பல நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, சர்வதேச நாணச் சபையுடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜூன் மாத இறுதியில் இந்நாட்டு உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 1,859 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என மத் திய வங்கி சுட்டிக்காட்டி யுள்ளது.

மேலும், வெளிநாட்டு நாணய இருப்புகள் 1,750 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# தனியார் பஸ் சேவையை தடையின்றி முன்னெடுக்க எரிபொருள் வேண்டும்!

## கிளிநொச்சி அரச அதிபருக்கு மகஜர்

**கிளிநொச்சி, ஜூலை 08**

**தனியார் பஸ் சேவையை தடையின்றி முன்னெடுக்க எரிபொருள் பெற்று தருமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினால் குறித்த கடிதம் நேற்று முற்பகல் 11 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அரச பஸ் சாலையில் எரிபொருள் வழங்கக் கோரி தனியார் பஸ் சங்கத்தினர் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

தனியார் பஸ் சேவையினருக்கு அரச பஸ் சாலைகளில் எரிபொருள் பெற்றுக்கொள்ளும் வகையிலான சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கிளிநொச்சி அரச பஸ் சாலையினர் தனியார் பஸ் சேவையினருக்கு எரிபொருளை வழங்காது இழுத்தடிப்பு செய்து வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, போராட்டம் நடைபெற்ற அன்றைய தினம் 1000 லீற்றர் டீசல் வழங்குமாறு பணிக்கப்பட்டது. ஆயினும் அன்றைய தினம் டீசல் வழங்காது அரச பஸ் சாலையினரால் இழுத்தடிப்பு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் தலையிட்டு மறுநாள் டீசல் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் பின்னர் டீசல் வழங்க அரச பஸ் சாலையினர் மறுத்த நிலையில் நேற்று மாவட்ட



அரசாங்க அதிபரை சந்தித்து தமது சேவை தடையின்றி நடைபெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடிதம் ஒன்றை அவர்கள் கையளித்தனர்.

குறித்த பஸ் சாலை முகாமையாளருடன் தொடர்புகொண்ட அரசாங்க அதிபர் டீசல் வழங்கப்படாமைக்கான காரணத்தை கோரினார். தொழிற்சங்கத்தினர் டீசல் வழங்குவதற்கு தடைகளை ஏற்படுத்துவதாக அரசாங்க அதிபரிடம் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை 4 மணிவரை டீசல் பெற்றுக்கொள்வதற்கு தனியார் பஸ் சேவையினர் வருகை தரவில்லை எனவும் அரசாங்க அதிபரிடம் அவர் தெரிவித்திருந்தார்.

குறித்த நாளன்று டீசல் பெற்று தருமாறு கோரி தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் சாலை பிரதான வாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதுடன், 6 மணியளவில் பொலிஸாரின் தலையீட்டினால் அது முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அரச பஸ் சாலை நிர்வாகத்தினரே எரிபொருளை வழங்க இழுத்தடிப்பு செய்தமை அப்பட்டமான வெளிச்சத்துக்கு வந்தது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் இரு தரப்பினரையும் அழைத்து பேச்சு நடத்தி சுமுகமான தீர்வுக்கு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினரிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பத்து சைக்கிள்கள் வழங்கப்பட்டன

*யாழ்ப்பாணம், ஜூலை 08*

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் 10 சைக்கிள்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு, சுகாதார பணியாளர்களின் போக்குவரத்தையும் பாதித்துள்ளது. சைக்கிள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இந்த நெருக்கடியை தீர்க்கும் முகமாக இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் காரை நலன்புரிச் சங்கத்தின் சார்பாக உபதலைவர் விநாசித்தம்பி நாகேந்திரம், செயலாளர் பரமநாதர் தவராஜா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் திரு கந்தசாமி பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

10 சைக்கிள்களையும் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர்கள் மருத்துவர். எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, மருத்துவர் சி. ஜமுனானந்தா மற்றும் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினரும் பெற்றுக்கொண்டனர்.

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தினரிடம் டாக்டர் த.சத்தியமூர்த்தி விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைய இந்தத் சைக்கிள்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. (அ)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு தொல்லியல் சார் தொழில்நுட்ப பயிற்சி

*யாழ்ப்பாணம், ஜூலை 08*

யாழ்ப்பாண பல்கலை மாணவர்களுக்கான தொல்லியல் சார் தொழில்நுட்பங்கள் தொடர்பான பயிற்சி வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாண கோட்டையில் நேற்று காலை 9மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொல்லியல் சார் தொழில்நுட்பங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், தொல்லியல் திணைக்களத்தினர், தொல்லியல் துறை விரிவுரையாளர்கள் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் அவுஸ்திரேலியாவில் உயிரிழப்பு!

*சிட்னி, ஜூலை. 08*

அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ரட்ணசிங்கம் பரமேஸ்வரன் என்ற தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

48 வயதான அவர் நேற்று காலை தூக்கத்திலேயே மரணமடைந்தார் என தமிழ் ஏதிலிகள் கழகத்தின் பேச்சாளர் அரன் மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட அவர், மேன்முறையீட்டு வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்திய நிலையிலேயே அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தார்.

வேலை செய்வதற்கான உரிமையும் அவருக்கு மறுக்கப்பட்டிருந்ததாக அரன் மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரட்ணசிங்கம் பரமேஸ்வரனின் 25 வயதான மகனும் மனைவியும் இலங்கையில் வசிக்கின்றனர். (அ)

# கடமைக்கு செல்ல எரிபொருள் கோரி ரயில் ஊழியர் மீண்டும் போராட்டம்

*கொழும்பு, ஜூலை 08*

மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக ரயில் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

கடமைக்கு சமுகமளிப்பதற்கு எரிபொருள் வழங்காததன் காரணமாக தாம் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக குறித்த தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

மேற்படி காரணத்தை முன்வைத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் சில ரயில் தொழிற்சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும், போக்குவரத்து அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து, நேற்று முன் தினம் குறித்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்நிலையில், நேற்று மீண்டும் ரயில் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இன்று காலை வரையில் கொழும்பில் நீர்வெட்டு!

*கொழும்பு, ஜூலை 08*

கொழும்பின் பல பகுதிகளுக்கு இன்று காலை வரை நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் குழாயில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதுடன், கொழும்பு 01 பிரதேசத்தில் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று காலை 6.00 மணிக்குள் நீர் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவர முடியும் என சபை தெரிவித்துள்ளது. (அ)

# கடவுச்சீட்டு பெற வரிசையில் நின்றிருந்த ஹற்றன் பெண் குழந்தையை பிரசவித்தார்!

*கொழும்பு, ஜூலை 08*

கடவுச்சீட்டுக்காக வரிசையில் காத்திருந்த பெண்ணொருவர் குழந்தையை பிரசவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு, குடியகல்வு காரியாலயத்துக்கு முன்பாக வரிசையில் கடவுச்சீட்டு பெறுவதற்காக, குறித்த பெண் வரிசையில் காத்திருந்துள்ளார்.

இதன்போது, பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து, அங்கிருந்த இராணுவத்தினரால் பொரளை - காசல் வீதி மகளிர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் வழியில் அவர் குழந்தையை பிரசவித்ததாக தெரிய வந்துள்ளது.

ஹற்றன் பகுதியைச் சேர்ந்த 26 வயதான பெண்ணொருவரே இவ்வாறு குழந்தையை பிரசவித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# ஜனாதிபதி, பிரதமரை பதவி விலகக்கோரி யாழ்ப்பாணத்தில் நாளை சைக்கிள் பேரணி!

## பொது அமைப்புகள் இணைந்து நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை. 08

**ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தை பதவிவிலகக் கோரி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ் நகர் நோக்கி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சைக்கிள் பேரணியொன்றை மேற்கொள்ள சில பொது அமைப்புகளால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

**யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேய இந்த போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.**

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் எட்டப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்துக்கு, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், செம்முகம் ஆற்றுகைக் குழு, தேசிய கலை இலக்கிய பேரவை, தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவை, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம், குரலற்றவர்களின் குரல், பன்மைத்துவ மக்களாட்சி மன்றம், புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனிஸ கட்சி, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகிய பொது அமைப்புகள் ஆதரவளிப்பதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

ஜூலை 9 ஆம் திகதி நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் அமைப்புகளால் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்திலும் போராட்டத்தை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் சபா தனுஜன், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் மனோரஞ்சன், புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனிஸ கட்சியின் செல்வம் கதிர்காமநாதன், பன்மைத்துவ மக்களாட்சி மன்றத்தின் செ. திலீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# 3600 லீற்றர் மண்ணெண்ணெயுடன் நாச்சிக்குடாவில் ஒருவர் சிக்கினார்

கிளிநொச்சி, ஜூலை. 08

கிளிநொச்சி முழங்காவில் நாச்சிக்குடா பகுதியில் 3600 லீற்றர் மண்ணெண்ணெயுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

முழங்காவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கொள்கலன்களில் நிறைத்து வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெயே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது சம்பவத்துடன் தொடர்புடைய 55 வயதான ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், 3600 லீற்றர் மண்ணெண்ணெயும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மண்ணெண்ணெய் வெள்ளை நிறமானது எனவும், இலங்கையில் பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெயிலிருந்து வேறுபட்டு காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மண்ணேண்ணெய் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சுனில் ரத்நாயக்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை. 08

யாழ்., மிருசுவிலில் எட்டு அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கனிஷ்ட அதிகாரியான சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு அளித்து விடுவித்தமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் யஸந்த கோட்டாகொட, தெல்தெனிய ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன்னால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் புதன்கிழமை பரிசீலிக்கப்பட இருந்தது.

நீதிமன்றம் இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

நேற்று முன்தினம் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தனின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மன்றில் முன்னிலையானார். எனினும், எதிராளியான சுனில் ரத்நாயக்க சார்பான சட்டத்தரணி மன்றில் முன்னிலையாகாத காரணத்தால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மிருசுவிலில் 8 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்க, அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார். ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் அவரது மேன்முறையீட்டை நிராகரித்து, 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றம் வழங்கிய மரணதண்டனையை உறுதி செய்திருந்தது. அத்தகைய கைதியையே தாம் பதவிக்கு வந்ததும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னித்து விடுவித்து இருந்தார். (அ)

# அதிக விலைக்கு எரிவாயுவை கொள்வனவு; கோப் குழு உடனடி விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூலை. 08

சியாம் நிறுவனத்திடம் இருந்து எரிவாயு மெற்றிக் தொன் ஒன்றை 96 அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தை ரத்துச்செய்து, ஓமான் நிறுவனத்திடம் இருந்து 129 டொலர் கொள்வனவுக்கு அங்கீகாரம் பெறப்பட்டமை தொடர்பில், கணக்காய்வாளர் நாயகம் ஊடாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோப் குழு விசாரணையின் முடிவில் பரிந்துரைத்தது.

இதன்போது லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட், லிட்ரோ காஸ் ரேர்மினல் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் ஆகியவற்றின் அதிகாரிகள் முன்னிலையாகினர்.

கடந்த பெப்ரவரி மாதத்துடன் எரிவாயு கொள்வனவுக்கான கேள்விப்பத்திரக் காலம் முடிவடைந்த நிலையில் 280,000 மெற்றிக் தொன் எரிவாயுவிற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன.

அதன்படி மூன்று எரிவாயு வழங்குநர்கள் விலைமனுவை சமர்ப்பித்தனர்.

இதன்போது, சியாம் எரிவாயு நிறுவனம் ஒரு மெற்றிக் தொன் ஒன்றுக்கு 96 அமெரிக்க டொலர்கள் என்ற மிகக் குறைந்த விலையை சமர்ப்பித்துள்ளதுடன் அதன் அடிப்படையில் அந்த நிறுவனத்துக்கு விநியோக அனுமதியை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

எனினும் ஏல நடவடிக்கையின்போது அறிவிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி இலங்கையில் உள்ள வங்கிகள் நாணய கடிதங்களை சியாம் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க முடியாததால் அந்த நிறுவனத்திடம் இருந்து எரிவாயுவைப் பெற முடியவில்லை என்று லிட்ரோ அதிகாரிகள் விசாரணையின்போது குறிப்பிட்டனர்.

இதனையடுத்து தற்காலிக தீர்வாக மெற்றிக் தொன் ஒன்றுக்கு 129 அமெரிக்க டொலர்கள் என்ற விலையை அனுப்பிய ஓமானிய நிறுவனம், மாதம் ஒன்றுக்கு 25,000 மெற்றிக் தொன் வீதம் 4 மாதங்களுக்கு 100,000 மெற்றிக் தொன் எரிவாயுவை வழங்க இணக்கம் வெளியிட்டதாக லிட்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் சியாம் கொள்வனவு ரத்து செய்யப்பட்டு ஓமான் நிறுவனத்திடம் இருந்து 100,000 மெற்றிக் தொன் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததாக லிட்ரோ அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

உலக வங்கியின் 70 மில்லியன் அமெரிக்க டொலர் கடனும் லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 20 மில்லியன் அமெரிக்க டொலர்களும் மொத்தமாக 90 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்தக் கொள்வனவுக்காக பயன்படுத்தப்பட்டதாக லிட்ரோ லங்கா நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் கோப் குழுவின் முன்னால் இடம்பெற்ற விசாரணையின்போது தெரிவித்தார்.

இந்த வாக்குமூலத்தை அடுத்து, உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 70 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை திறம்பட பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து முறையான விசாரணை நடத்தி அறிக்கை அளிக்குமாறு கோப் தலைவர் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்தார். (அ)

# புதிய வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கிறது இலங்கை அரசு

## வெளிவிவகார அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை. 08

நெருக்கடி நிலையிலிருந்து இலங்கை மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியம், முன்வைத்துள்ள யோசனைகளை கருத்தில் கொண்டு இலங்கை அரசாங்கம் புதிய வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஹன்னா சிங்கருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின்போது அமைச்சர் பீரிஸ் நாட்டின் தற்போதைய நிலைமை, குறிப்பாக எரிபொருள், உணவு மற்றும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் வதிவிடப் பிரதிநிதிக்கு விளக்கமளித்தார்.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் நிறுவனங்களின் மனிதாபிமான உதவியின் தற்போதைய நிலை குறித்து வதிவிட பிரதிநிதி விளக்கினார்.

ஐக்கிய நாடுகள் சபையால், இலங்கைக்கு வழங்கப்படும் உடனடி உதவிகளில் பெரும்போகத்துக்கான யூரியா, மருந்துப் பொருட்கள், விதைகள் மற்றும் பாடசாலைகளுக்கு ஊட்டமளிக்கும் வேலைத்திட்டம் என்பனவும் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# நீங்கியது தடை!

## வரும் 11ஆம் திகதி அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம்: உச்சநீதிமன்றம் பச்சைக்கொடி காட்டியது!



அ.தி.மு.க., பொதுக் குழுவை 11ம் திகதி கூட்டுவதற்கு, இந்திய உச்ச நீதிமன்றம் பச்சைக் கொடி காட்டியுள்ளது. மேலும், பொதுக் குழுவில் விவாதிக்கப்பட உள்ள தீர்மானங்கள் தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றம் விதித்திருந்த கட்டுப்பாடும் நீக்கப் பட்டுள்ளது.

அ.தி.மு.க.,வில் ஒற்றைத் தலைமை குறித்த பிரச்னை உருவாகியுள்ளது. இது தொடர்பாக விவாதிக்க, கட்சியின் செயற்குழு மற்றும் பொதுக் குழுவை, கடந்த மாதம் 23ம் திகதி கூட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது. இதை எதிர்த்து, திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுக் குழு உறுப்பினர் சண்முகம் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

**தீர்மானங்கள்**

கடந்த 22ம் திகதி இதை விசாரித்த தனி நீதிபதி, கூட்டத்தை நடத்துவதற்கு தடை விதிக்க மறுத்தார். அதே நேரத்தில், கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ள தீர்மானங்கள் குறித்த பிரச்னையில் தலையிட மறுத்தார். இதை எதிர்த்து, சண்முகம் மற்றும் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் இரவோடு இரவாக முறையிடப்பட்டது. இதை, இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, 23ம் தேதி அதிகாலையில் விசாரித்தது.

பொதுக் குழுவை நடத்த அனுமதி அளித்த அமர்வு, ஏற்கனவே திட்டமிட்ட 23 தீர்மானங்கள் குறித்து மட்டுமே விவாதிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. புதிய தீர்மானங்களை நிறைவேற்ற தடை விதித்தது.

இதைத் தொடர்ந்து, 23ம் திகதி நடந்த பொதுக் குழுவில், 23 தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. கட்சியின் தற்காலிக அவைத் தலைவரான தமிழ்மகன் உசேனை, நிரந்தர அவைத் தலைவராக நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், ஜூலை 11ம் திகதி மீண்டும் பொதுக் குழுவை நடத்த முடிவு செய்யப்பட்டது. உயர் நீதிமன்றத் தீர்ப்பை மீறி, வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதை எதிர்த்து, சண்முகம் மற்றும் பன்னீர்செல்வம் தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

**உள்விவகாரம்**

இந்நிலையில், ஜூன் 23ம் திகதி சென்னை உயர் நீதிமன்ற அமர்வு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, முன்னாள் முதல்வர் பழனிசாமி தரப்பில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு, நீதிபதிகள் தினேஷ் மகேஷ்வரி, கிருஷ்ண முராரி அடங்கிய விடுமுறை கால அமர்வில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. "ஒரு கட்சியின் உள்விவகாரங்களில் தலையிட நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை." என்னென்ன தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதை பொதுக் குழு உறுப்பினர்களே முடிவு செய்ய வேண்டும்," என, பழனிசாமி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சி.எஸ்.வைத்தியநாதன் வாதிட்டார்.

மேலும், இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதாக உச்ச நீதிமன்றம் அறிவித்த பின், பொதுக்குழு விவகாரத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத்தில் துவங்கியுள்ளது குறித்தும் அவர் குறிப்பிட்டார். அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட, உச்ச நீதிமன்ற அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவு: சென்னை உயர் நீதிமன்றம் ஜூன் 23ம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்கப் படுகிறது. இது தொடர்பாக, சண்முகம் மற்றும் பன்னீர் செல்வம் தரப்பு, இரண்டு வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் எந்த இடைக் கால உத்தரவையும் பிறப்பிக்க வேண்டிய தில்லை என கருதுகிறோம்.

**முட்டுக்கட்டை**

இந்த விவகாரம் தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி முன் உள்ள வழக்கின் விசாரணைக்கு, இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு, எந்த முட்டுக்கட்டையாகவும் இருக்காது. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி, தன் முன் உள்ள வழக்கில், சட்டத்துக்கு உட்பட்டு உரிய உத்தரவுகளை பிறப்பிக்கலாம். வரும் 11ம் திகதி கட்சியின் பொதுக் குழுவை, சட்டத்துக்கு உட்பட்டு நடத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை. இவ்வாறு உச்ச நீதிமன்ற அமர்வு தன் உத்தரவில் கூறியுள்ளது. பொதுக் குழுவை கூட்டுவதற்கு தடை விதிக்க மறுத்ததுடன், தீர்மானங்கள் குறித்து சென்னை உயர் நீதிமன்ற அமர்வு விதித்திருந்த கட்டுப்பாடும் இதன் வாயிலாக நீக்கப்பட்டுள்ளது. முன்னதாக, பொதுக்குழு விவகாரத்தில் உயர் நீதிமன்ற இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, தன் அதிகார வரம்பிற்கு மீறி உத்தரவு பிறப்பித்துள்ளதாக, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

# பா.ஜ.கவின் புதிய இலக்கு!

## ஹைதராபாதில் நடைபெற்ற பா.ஜ.க. தேசிய செயற்குழுக் கூட்டம்

இந்தியாவின் தெலுங்கானா மாநில தலைநகர் ஹைதராபாதில் இரண்டு நாள்கள் கூடிய பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் சில முக்கியமான முடிவுகளையும் செயல் திட்டங்களையும் அறிவித்திருக்கிறது. மத்திய ஆளுங்கட்சி என்பதுடன், இந்தியாவில் 19 மாநிலங்களில் ஆளுங்கட்சியாகவும் இருப்பதால், பாஜகவின் முடிவுகள் தேசிய அளவில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஹிந்தி பேசும் மாநிலங்களில் மட்டுமே வலுவாக இருந்த கட்சி என்பது போய், வட மாநிலங்களின் கட்சி என்று வளர்ந்து இப்போது இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் வரை ஆளுங்கட்சியாக உயர்ந்திருக்கிறது பாஜக. 1977-லும், 1989-லும் ஆட்சிகள் அமைந்ததன் பின்னணியில் ஜனசங்கமும், அதன் மறுபிறவியான பாஜகவும் இருந்தன.

அதுவரை பாஜகவுக்கு எதிராகக் கடைப்பிடிக்கப் பட்ட தீண்டாமையை 1998-இல் அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையில் ஏற்படுத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி முறியடித்தது. கொள்கை ரீதியாக பாஜகவு டன் சேரவே முடியாத திமுக, ஐக்கிய ஜனதா தளம், காஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி உள்ளிட்டவைகூட தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்தது, தேசியக் கட்சியாக பாஜக தன்னை வளர்த்துக் கொள்ள உதவியது.

2014-இல் நரேந்திர மோடி தலைமையில் அமைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, முந்தைய வாஜ்பாய் அரசிலிருந்து மாறுபட்டதாக இருந்தது. ஆனாலும்கூட காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி, இடதுசாரிக் கட்சிகளைத் தவிர, இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலக்கட்சிகள் அனைத்துமே ஏதாவது ஒரு கட்டத்தில் பாஜகவுடன் இணைந்து செயல்பட்டவை என்பதால், பாஜக தவிர்க்கவும், அசைக்கவும் முடியாத அரசியல் சக்தியாக உருவெடுத்திருக்கிறது.

நரேந்திர மோடி - அமித் ஷா தலைமையில் பாஜக இணைத்துக்கொண்ட புதிய நட்புகளைவிட, இழந்த பழைய கூட்டாளிகள்தான் அதிகம். அதே நேரத்தில், கூட்டாளிகளின் இழப்பால் பாஜக அதிக மாநிலங்களில் வளர்ந்தது என்பதும், பாஜகவுடன் உறவைத் துண்டித்துக் கொண்ட கட்சிகள் செல்வாக்கை இழந்தன என்பதும் கடந்த எட்டாண்டு கால வரலாறு தெரிவிக்கும் உண்மை.



இந்தப் பின்னணியில்தான், ஹைதராபாதில் கூடிய பாஜகவின் தேசிய செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானங்களையும், செயல் திட்டங்களையும் நாம் பார்க்க வேண்டும். உள்துறை அமைச்சரும், முன்னாள் கட்சித் தலைவருமான அமித் ஷாவால் கட்சியின் வருங்கால இலக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சியின் செயல்பாடு எப்படி இருக்க வேண்டும் என்பது பிரதமர் நரேந்திர மோடியால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

கர்நாடகம் தவிர ஏனைய தென்னிந்திய மாநிலங்களில், பாஜகவை வலுப்படுத்தி ஆட்சி அமைக்கும் நிலைக்கு வளர்ப்பது என்பதுதான் உள்துறை அமைச்சர் அமித் ஷா விடுத்திருக்கும் சூளுரை. குடும்ப அரசியல், ஜாதி அரசியல் ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக பாஜகவின் வளர்ச்சி அமைய வேண்டும் என்பது அவரது கருத்து. அடுத்த 40 ஆண்டுகள் அசைக்க முடியாத அரசியல் சக்தியாகவும், மத்தியில் ஆளுங்கட்சியாகவும் பாஜகதான் இருக்கும் என்றும் அமித் ஷா அந்த செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கர்நாடகம் தவிர, தெலங்கானா, ஆந்திரம், தமிழகம், கேரளத்தில் கட்சிக்கு வலுவான அடிப்படைக் கட்டமைப்பே இல்லாத நிலையில், ஆட்சியைப் பிடிப்பது எப்படி சாத்தியம் என்கிற விமர்சனங்கள் எழுப்பப்படுகின்றன. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மேற்கு வங்க பாஜகவின் நிலைமையை சற்று எண்ணிப் பார்த்தால், அமித் ஷாவின் எதிர்பார்ப்பை நிராகரித்துவிட முடியாது. இடதுசாரிகளும், காங்கிரசும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, இப்போது மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் பிரதான அரசியல் எதிரியாக பாஜக உயர்ந்திருக்கிறது.

மாநிலக் கட்சிகளின் கூட்டணியில் தன்னை இணைத்துக் கொண்டு காங்கிரஸ் வலுவிழந்திருக்கும் நிலையில், வலுவான தேசியக் கட்சியின் தேவையை தென்னிந்திய மாநிலங்கள் உணர்கின்றன. பிரதமர் நரேந்திர மோடியின் தலைமை மீதான நம்பிக்கை அதிகரித்து வரும் நிலையில், அமித் ஷா போடும் கணக்கு வெற்றி பெற்றால் வியப்பே இல்லை.

பிரதமர் நரேந்திர மோடியின் "நட்புறவுப் பயணம்" (ஸ்நேக யாத்ரா) அறிவுறுத்தல் இன்னொரு முக்கியமான செய்தி. முஸ்லிம், கிறிஸ்துவ சிறுபான்மையினர் மத்தியில் பாஜக குறித்த தவறான கருத்துகளை அகற்றும் வகையில் தொண்டர்கள் தங்கள் அணுகுமுறையை மாற்ற வேண்டும் என்பது அவரது வேண்டுகோள். பாஜக ஆட்சியில் எந்தவொரு மக்கள் நலத் திட்டத்திலும் சிறுபான்மையினர் தனிமைப்படுத்தப்படவோ, புறக்கணிக்கப்படவோ இல்லை என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கும் விதத்தில், அவர்களைத் தேடிச் சென்று விளக்க வேண்டும் என்பதுதான் அவரது "நட்புறவுப் பயண" அறிவுரை.

உத்தர பிரதேசத்திலும், பல வடமாநிலங்களிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கும் தொகுதிகளில்கூட பாஜக வெற்றி பெற்றிருக்கிறது என்பது எந்த அளவுக்கு மத்திய அரசின் திட்டங்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைந்திருக்கிறது என்பதை உணர்த்துகிறது. அதே அணுகுமுறையை, அடித்தளம் இல்லாத தென்னிந்திய மாநிலங்களிலும் கடைப்பிடிப்பது பாஜக தலைமையின் நோக்கமாக இருக்கலாம்.

எந்தவொரு அரசியல் கட்சியும் தன்னை வளர்த்துக் கொள்ளவும், அதன் மூலம் கொள்கைகளைப் பரப்பவும் முனைப்புக் காட்டுவது இயல்பு. தென்னிந்தியாவில் வலுவிழந்த காங்கிரஸ் ஏற்படுத்தி இருக்கும் வெற்றிடத்தை பாஜக நிரப்ப நினைத்தால் அதில் தவறு காண முடியாது. தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகி நிற்பது தென்னிந்திய மாநிலங்களின் வளர்ச்சிக்கும், வருங்காலத்துக்கும் நல்லதல்ல!

# பொருளாதார நெருக்கடியை பாவித்து இலங்கையை ‘குவாட்’ அமைப்பில் சேர்க்க அமெரிக்கா முயற்சி!

## செனட் வெளியுறவு கமிட்டி தலைவர் வெளியுறவு அமைச்சர்களுக்கு கடிதம்

தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி சீனாவுக்கு எதிரான இந்தோ - பசுபிக் கூட்டமைப்பான ‘குவாட்’ டுக்குள் இலங்கையை இழுப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா இறங்கியிருக்கிறது.

குவாட் அமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு நாடுகளும் வேண்டுகோள் விடுக்கப்படும்வரை காத்திராமல் இலங்கைக்கு உதவவேண்டும் என்றும் அவ்வாறு செய்வதன் மூலம் குவாட்டின் ஆற்றல்களை வெளிக்காட்டும் என்றும் அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு கமிட்டியின் தலைவர் றொபேர்ட் மெனண்டஸ் வலியுறுத்தியிருக்கிறார்.


அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கென், ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா, இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் மற்றும் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பெனி வொங் ஆகியோருக்கு ஜூன் 10 திகதி மெனண்டஸ் எழுதியிருக்கும் கடிதத்தில் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் குவாட்டின் ஆற்றல்களை வெளிக்காட்டுவதற்கு இலங்கைக்கு உதவுவதில் முன்னிற்குமாறு கேட்டிருக்கிறார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கும் கடன் பிரச்சினைக்கும் ராஜபக்ச சகோதரர்களையும் சீனாவையும் குற்றஞ்சாட்டியிருக்கும் மெனண்டஸ், சகல சமூகங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் மாற்றத்துக்கான நேரம் இது என்பதை வெளிக்காட்ட கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்.

குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அண்மையில் டோக்கியோவில் நடத்திய மகாநாட்டில் காலநிலை மாற்றம் தொடக்கம் தொற்றுநோய்த் தடுப்பாற்றல் மற்றும் இணையவெளி பாதுகாப்பு வரை பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கண்ட முன்னேற்றத்தை பாராட்டிய செனட் வெளியுறவு கமிட்டியின் தலைவர் இலங்கை குறித்து கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையில் தொடங்கி இந்து சமுத்திர அயலகத்தில் குவாட் செய்யக்கூடிய,செய்யவேண்டிய பெருமளவு பணிகள் இருக்கின்றன.

இந்து சமுத்திரத்தில் 2004 டிசம்பரில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு எமது நான்கு நாடுகளும் கூட்டாக செய்த அவசரகால உதவிகளிலேயே குவாட்டின் தொடக்க நிலை முகிழ்த்தது. அந்த உணர்வினதும் பாரம்பரியத்தினதும் அடிப்படையில் குவாட்டின் இன்றைய பயணம் பாரதூரமான மனிதாபிமான நெருக்கடியை தோற்றுவிக்கக்கூடிய ஆபத்தைக்கொண்ட பொருளாதார நெருக்கடியை இலங்கையில் தவிர்ப்பதாக இருக்கமுடியும். இலங்கையில் தோன்றக்கூடிய மனிதாபிமான நெருக்கடி பிராந்திய ரீதியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியதாகும்.





### ராஜபக்சாக்களும் சீனாவும்

இலங்கையின் இன்றைய இடர்நிலைக்கு ராஜபக்ச சகோதரர்களையும் சீனாவையும் குற்றஞ்சாட்டிய மெனண்டஸ், “ராஜபக்சாக்களின் கீழ் இலங்கை நிதித்துறைச் சீர்குலைவினதும் மனித அவலத்தினதும் விளிம்பில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறது. மகிந்த ராஜபக்ச தனது நாட்டை நேரடியாக சீனக்கடன் பொறிக்குள் கொண்டுபோய் வீழ்த்தினார். பிறகு அவரது சகோதரர் கோதாபய ராஜபக்ச வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்தமுடியாத வங்குரோத்து நிலைக்கு நாடு செல்வதைத் தடுக்கக்கூடிய விவேகமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினார். இன்று சகல சமூகங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் மாற்றத்துக்கான நேரம் இது என்பதை வெளிக்காட்டுவதற்கு கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள்” என்று கூறியிருக்கிறார்.

### இந்தியாவுக்கு பாராட்டு

பொருளாதார நெருக்கடியைத் தணிக்க இந்தியா தானாக முன்வந்து இலங்கைக்கு உதவுவதில் ஏற் கெனவே பெரும்பங்கை ஆற்றியிருக்கிறது என்று குறிப்பிட்ட மெனண்டஸ், வாஷிங்டன் இலங்கைக்கு நீண்ட கால பொருளாதார ஆதரவை வழங்க தயாராகின்றது. இலங்கை மக்களுக்கு ஜப்பான் உணவு உதவியை வழங்குகிறது. இவையெல்லாம் நலம்வாய்ந்த நடவடிக் கைகள் என்று கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

### குவாட்டின் பணி

குவாட் அமைப்பு செய்யவேண்டிய பணிகள் குறித்து விளக்கிய மெனண்டஸ், “மேலதிக மனிதாபிமான உதவியை திரட்டுதல், அவசரமாக தேவைப்படுகின்ற எரிபொருட்களை வழங்குதல், நிதிக் கணக்கீடு, சுகாதாரம், உணவுப்பாதுகாப்பு மற்றும் பெரும்பாக பொருளாதாரக் கொள்கை ஆகிய துறைகளில் தொழில்நுட்ப ஆதரவையும் ஆலோசனையையும் வழங்குதல் உட்பட குவாட்டின் மூலமாக இலங்கைக்கு செய்யக்கூடிய பெருமளவு காரியங்கள் இருக்கின்றன. குவாட்டின் புதிய மனிதாபிமான மற்றும் அனர்த்த நிவாரண பொறிமுறை யூடாக ஜப்பானும் அவுஸ்திரேலியாவும் மிகப்பெரிய பங்கை வகிக்கமுடியும். அவ்வாறு செய்வதன் மூலமாக இந்தோ - பசுபிக் பிராந்தியம் முழுவதும் சவால்களை கையாளுவதில் குவாட்டுக்கு இருக்கும் ஆற்றல்களை வெளிக்காட்டலாம்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

### மனித உரிமைகள் விவகாரம்

இலங்கையின் மனித உரிமைகள் பிரச்சினையை மறக்காமல் குறிப்பிட்ட மெனண்டஸ், இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது இழைக்கப்பட்ட “போர்க் குற்றங்கள்” தொடர்பில் குவாட் ஒரு பொது நிலைப் பாட்டை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

“இராஜதந்திர முனையில், குவாட் அமைப்பின் நான்கு நாடுகளும் இலங்கைப்போரில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கை இவ்வருடம் வரும்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடு மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதித்தல் தொடர்பில் குவாட்டின் பற்றுறுதியை வெளிக்காட்ட இராஜதந்திர ஐக்கியம் உதவும்” என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

முடிவாக மெனண்டஸ், இந்த வகையான உதவிகள் எல்லாம் பிராந்தியத்தில் மாறிவருகின்ற சூழ்நிலைகள் மற்றும் தோன்றுகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு வெளிக்கிளம்பும் இந்தோ- பசுபிக் கட்டமைப்பில் வலிமையும் விரைவூக்கமும் கொண்ட அத்தியாவசியமான ஒரு கூறாக குவாட் விளங்குகிறது என்பதை வெளிக்காட்டும் என்று கூறியிருக்கிறார்.

- பி.கே. பாலச்சந்திரன்,
நியூஸ் இன் ஏசியா





# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

### 08.07.2022 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

### 08.07.2022 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# மட்டக்களப்பு விவசாயிகளுக்கு கரம் கொடுக்கின்றது ஐ.ஓ.சி!

## மகிழ்ச்சியில் விவசாயிகள்

**மட்டக்களப்பு, ஜூலை. 08**

**மட்டக்களப்பு நகர் பகுதியிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிறுவனத்தினூடாக நேற்று விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி டீசல் விநியோகம் இடம்பெற்றுள்ளது.**

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இறுக்கமானக சூழ்நிலையில் எரிபொருளை பெற்றிக்கொள்வதில் அனைத்துத் தரப்பினரும் மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை இம்முறை 80 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், கடந்த 20 நாட்களாக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அறுவடை செய்ய பயன்படுத்தும் இயந்திரங்களுக்கான டீசல் சீரான முறையில் கிடைக்கப்பெறாதமையினால் 20 நாட்கள் கடந்த நிலையில் பல ஏக்கர் விவசாய நிலங்களை காட்டு யானைகளிடம் இருந்து காத்துக்கொள்வதில் விவசாயிகள் சிரமத்தை எதிர்கொள்வது மட்டுமன்றி, அறுவடைக்கான காலம் தாமதமாகியுள்ளமையினால் நெற்கதிர்கள் உதிர்ந்து சேதமடைந்து வருகின்றன.

வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள முருக்கன்தீவு கண்டத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள 200 ஏக்கருக்கான 3000 லீற்றர் எரிபொருளே நேற்று முன்னுரிமையடிப்படையில் விவசாயிகளுக்கு குறித்த எரிபொருள் நிலையத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்று குறித்த எரிபொருள் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள 6600 லீற்றர் டீசலில் 3000 லீற்றர் டீசல் அறுவடைக்கு தயாராக உள்ள விவசாயிகளுக்கும், இலங்கை அஞ்சல் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கும், மேலும் பல அரச திணைக்களங்களின் வாகனங்கள் உள்ளிட்ட, நோயாளர் காவு வண்டிகளுக்கும் வழங்கப்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரான சமூக சேவையாளர் முத்துக்குமார் செல்வராசாவுக்கு குறித்த எரிபொருள் நிலையத்துக்கு வருகை தந்து எரிபொருளினை பெற்றுக்கொண்ட விவசாயிகள் தமது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்தனர். (அ)

# 2,160 லீற்றர் மண்ணெண்ணெயுடன் கல்முனையில் ஒருவர் சிக்கினார்

அம்பாறை, ஜூலை. 08

கல்முனை பகுதியில் 2,160 லீற்றருக்கும் அதிக மண்ணெண்ணெயுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் 51 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# கல்முனையில் ஓட்டோ சாரதிகள் போராட்டம்!




அம்பாறை, ஜூலை. 08

எரிபொருள் உரிய முறையில் கிடைக்க ஆவண செய்யுமாறு கோரி முச்சக்கர வண்டி சாரதிகள் நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டமானது அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் அருகில் ஆரம்பித்து மாநகர பகுதியினுடாக ஊர்வலமாக சென்று பின்னர் கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திலும் மகஜர் கையளிக்கப்பட்டது.

இதன்போது தாம் எரிபொருள் பிரச்னை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாகவும், அத்தியவசிய சேவை என சில துறையினருக்கு எரிபொருள் வழங்கப்படுவதாகவும், எமது சேவையும் அத்தியவசிய சேவையின் ஒரு பகுதியாக கருதி எமக்கான எரிபொருளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஓட்டோ சாரதிகள் கோரக்கை விடுத்தனர். (அ)

# தமிழக அரசின் 2 ஆம் கட்ட உதவி கிண்ணியா மக்களுக்கு



மட்டக்களப்பு, ஜூலை. 08

இந்தியா, தமிழ் நாட்டினுடைய 2ஆம் கட்ட மனிதாபிமான நிவாரண பொதிகள், கிண்ணியா பிரதேச செயலாளரால் உப்பாறு கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு நேற்றுக் கையளிக்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையின் கீழ் நடைபெற்ற இவ் நிவாரண பொதிகள் வழங்கும் நிகழ்வில், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை அதிகாரிகள் முதலானோர் கலந்துகொண்டனர்.

இந்தியா தமிழ்நாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1,450 பொதிகள், 31கிராம சேவகர் பிரிவில் உள்ள 7,250 குடும்பங்களுக்கு மொத்தமாக கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கப்பட்டன.

இவற்றுள் உப்பாறு கிராம சேவகர் பிரிவில் உள்ள 100 குடும்பங்களுக்கு 100 பொதிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

பொருளாதார ரீதியாக தொழில் இழந்த பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்குகின்ற தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கே இவ்வாறு இந்த நிவாரண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டு.சந்திவெளியில் குடும்பஸ்தர் வீட்டில் வைத்து வெட்டிக் கொலை

மட்டக்களப்பு, ஜூலை. 08

மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் கணவன் மனைவிக்கிடையே இடம்பெற்ற சண்டை காரணமாக ஆண் ஒருவர் கத்தியால் நேற்று முன் தினம் இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், கொலை செய்யப்பட்டவரின் 17 வயது மகன் மற்றும் 3 பெண்கள் உட்பட 6 பேரை கைது செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி கலலூர் வீதி பாலைத்தேனாவைச் சேர்ந்த 38 வயதுடைய கந்தசாமி இளையராஜா என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சந்திவெளி வைத்தியசாலைக்கு அருகில் பிரதான வீதியிலுள்ள கொலை செய்யப்பட்டவரின் மனைவியின் தாயார் வீட்டில் சம்பவதினமான நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவில் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட வாய்தர்க்கம் சண்டையாக உருவாகியதையடுத்து, மனைவியின் உறவினர்கள் மைத்துனர் மீது கத்தியால் வெட்டியதையடுத்து, சம்பவ இடத்தில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இந்த கத்தி வெட்டு தாக்குதலில் ஈடுபட்ட உயிரிழந்தவரின் 17 வயதுடைய மகன் மற்றும் 3 பெண்கள் உட்பட 6 பேரை கைது செய்துள்ளதுடன் சம்பவ இடத்திற்கு தடவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (அ)

# விறகு எடுப்பதற்கு காட்டுக்கு சென்றவர் யானை தாக்கி பலி

திருமலை, ஜூலை. 08

திருகோணமலை-வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுபகுதிக்குள் விறகு எடுக்க சென்ற ஒருவரை காட்டு யானை தாக்கியதையடுத்து, கந்தளாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக வான்எல பொலிஸார் தெரிவிக்கின்றனர். இச்சம்பவத்தில் 57 வயதுடைய டி.டி.ஆரிய ரத்தின எனும் நான்கு பிள்ளைகளின் தந்தை யொருவரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் எரிவாயு முடிந்த நிலையில், சமைப்பதற்காக காட்டுப் பகுதியில் விறகு எடுக்க சென்ற போதே மறைந்திருந்த காட்டு யானை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கந்தளாய் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கோவிட் 19 வைரஸின் புதிய திரிபு கண்டறிவு

## உலக சுகாதார அமைப்பு

ஜெனிவா, ஜூலை 08

ஒமைக்ரோன் மாறுபாட்டின் புதிய வகை கொரோனா பிஏ. 2.75 பல்வேறு நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால், கடந்த இரண்டு வாரங்களில் உலகளவில் பதிவான வழக்குகள் 30 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், பிஏ. 4 மற்றும் பிஏ. 5 புதிய அலைகள் எழுந்துள்ளன. இந்தியா போன்ற நாடுகளில் பிஏ. 2.75 இன் புதிய துணை வகை தொற்று கண்டறியப்பட்டுள்ளது.



நாம் இன்னும் தொற்று நோய்க்கு மத்தியில் இருக்கிறோம். நோய்க்கிருமிக்கு நிறைய சக்தி உள்ளது. எனவே பிஏ. 4 அல்லது பிஏ. 5 அல்லது பிஏ. 2.75 ஆக இருந்தாலும் நோய்க்கிருமி தொற்று தொடரும். மக்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும். கூட்டத்தைத் தவிர்க்க வேண்டும். மக்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் - என்றார். (ஐ)

# பிரதமர், கட்சி தலைமையை துறந்தார் பொறிஸ் ஜோன்சன்!

லண்டன், ஜூலை 08

பிரதமர் பதவியிலிருந்தும் கென்சவேர்ட்டிவ் கட்சியின் தலைமை பதவியிலிருந்தும் விலகுவதாக பொறிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார்.

கட்சி தலைவர் பதவியிலிருந்து விலகுகின்றேன். ஆனால், புதிய பிரதமரை கட்சி தெரிவு செய்யும் வரை பதவியில் நீடிப்பேன் என்று பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்

யாரும் தவிர்க்க முடியாதவர்கள் அல்லர் என அவர் குறிப்பிட்ட அவர், உலகின் தலைசிறந்த பணியை விட்டுக் கொடுப்பது குறித்து கவலையடைகின்றேன். அத்துடன், கென்சவேர்ட்டிவ் பாராளுமன்ற குழுவே நான் பதவி விலகுவதற்கான காரணம் - என்றார்.



மந்தைகள் நகரும்போது நகரும் என அவர் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தனக்கு எதிராக செயல்பட்டமை.

நான் அமைச்சரவை ஒன்றை நியமித்துள்ளேன் புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை நான் பதவியில் தொடர்வேன். கிறிஸ் பிஞ்சர் விவகாரம் ஏனைய சர்ச்சைகள் காரணமாக கடும் சீற்றத்துடன் காணப்பட்ட கென்சவேர்ட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த சில நாட்களாக பொறிஸ் ஜோன்சனுக்கு எதிராகக் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்த நிலையிலேயே அவர் பதவி விலகியுள்ளார். (ஐ)

# உக்ரைன் போரை நிறுத்த ரஷ்யாவுக்கு சீனா அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## அவுஸ்திரேலியா வலியுறுத்து



சிட்னி, ஜூலை 08

உக்ரைன் யுத்தத்தை ரஷ்யா நிறுத்தவேண்டும் என சீனா அழுத்தம் கொடுக்கவேண்டும் என அவுஸ்திரேலியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிங்கப்பூரில் உரையாற்றிய அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனி வொங் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சீனா ரஷ்யாவிடம் தனக்குள்ள சிறந்த செல்வாக்கைப் பயன்படுத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பரப்புரையில் ஈடுபடவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். செல்வாக்கு மிக்க வலுவான நாடுகள் யுத்தத்தை நிறுத்துவதற்கான அழுத்தத்தை புடின் மீது கொடுக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில், சீனாவும் இடம்பெறவேண்டும், வல்லரசு நாடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடு ரஷ்யாவுடன் எல்லையற்ற கூட்டுப்பங்காண்மையை கொண்டது என அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ஸ்யாமீது சீனா அழுத்தங்களை கொடுப்பது எங்கள் பிராந்தியத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பெருமளவு உதவும் எங்கள் பிராந்தியமும் உலகமும் ரஷ்யா தொடர்பில் சீனா எவ்வாறு செயல்படுகின்றது என்பதை உன்னிப்பாக அவதானித்த வண்ணமுள்ளன - என்றும் கூறினார். (ஐ)



# சோமாலியாவில் கடும் வறட்சி; பஞ்சத்தில் மடிகின்றனர் மக்கள்!

அங்காரா, ஜூலை 08

சோமாலியாவில் கடுமையான வறட்சி நிலவுவதைத் தொடர்ந்து, அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது, துருக்கியிடம் உதவ வேண்டி ஆதரவு கேட்டிருக்கிறார்.

சோமாலிய அதிபர் ஹசன் ஷேஷ் முஹமது முதன்முறையாக துருக்கிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். அங்கு அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியது:

“சோமாலியாவில் நிலவும் கடும் வறட்சி குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது. துருக்கிய சகோதரர்கள் எங்களுக்கு உறுதுணைபுரிய வேண்டும். அவர்கள் முன்பு செய்த உதவிகளைப்போல, அவர்களால் முயன்ற உதவியை செய்ய வேண்டும். உங்களது ஆதரவு சோமாலிய மக்களின் உயிர்களைக் காப்பாற்றும். நான் இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்” என்றார்

இந்த நிலையில் துருக்கி அதிபர் எர்டோகன், சோமாலியாவின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்புக்கு துருக்கி என்றும் உதவும் என்று தெரிவித்திருக்கிறார்.

கடந்த சில மாதங்களாகவே சோமாலியாவின் பல பகுதிகள் வறட்சி நிறைந்த பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக சோமாலியாவுக்கு சர்வதேச நாடுகளிலிருந்து கிடைக்கும் நிதி உதவிகள் கிடைக்கவில்லை. இதனால் சோமாலியாவில் நிலைமை மிக மோசமாகியுள்ளது.

40 ஆண்டுகளில் இல்லாத மோசமான வறட்சியால் சோமாலியாவில் இலட்சக் கணக்கான மக்கள் கடுமையான பட்டினியை எதிர்கொண்டுள்ளனர். சுமார் 43 இலட்சம் மக்கள் உணவு, தண்ணீர், இருப்பிடமின்றி தவித்து வருகின்றனர்.

ஆபிரிக்க கண்டத்தின் கொம்பு பகுதியில் அமைந்துள்ள சோமாலியாவில், நிலையான அரசு அமையாதது, தொடர்ந்து நடந்து வரும் உள்நாட்டு சண்டைகள், மழையின்மை ஆகியவை கடும் வறட்சிக்கு காரணமாகியுள்ளன. இதில், தெற்கு சோமாலியாவில் கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம்தான் கடும் வறட்சிக்கு எதிராக சோமாலியா அரசு அவசர நிலையை அறிவித்தது. எனினும், 5 மாதங்கள் கடந்தும் சோமாலியாவில் நிலைமை சீராகவில்லை.

கடந்த சில வருடங்களில் மட்டும் சோமாலியாவில் இரண்டரை இலட்சம் பேர் பட்டினியால் மடிந்துள்ளனர். இந்த எண்ணிக்கை கூடுதலாக இருக்கவும் வாய்ப்புண்டு. (ஐ)

# உக்ரைன் போரில் 324 சிறுவர்கள் பலி!

கீவ், ஜூலை 08

உக்ரைனில் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 346 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

பெப்ரவரி 24 அன்று கியேவ்மீது ரஷ்ய படைகள் தனது ஆக்கிரமிப்பைத் தொடங்கியது. அதுமுதல் நேற்று வரை மொத்தம் 346 சிறுவர்கள் பலியாகினர். மேலும், 645 சிறுவர்கள் காயமடைந்துள்ளனர் என்று உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள உயிரிழப்புகளின் எண்ணிக்கை இறுதியானது கிடையாது. ஆக்கிரமிக் கப்பட்ட பகுதிகளில் தரவுகளைத் திரட்டும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. ரஷ்ய படைகள் நடத்திய தொடர் தாக்குதல்களால் உக்ரைனில் 2,108 பாடசாலைகள்



சேதடைந்துள்ளன. அவற்றில் 215 முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி போரிலிருந்து தப்பிச் செல்லும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பல குழந்தைகள் குடும்பப் பிரிவினை, வன்முறை, துஷ்பிரயோ கம், பாலியல், கடத்தல் போன்ற ஆபத்துக்களில் சிக்கி யுள்ளனர் என்று யுனிசெவ் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்கும் விளையாட்டு விழா

மட்டக்களப்பு, ஜூலை 08

ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்கும் விளை யாட்டு விழா எதிர்வரும் ஓகஸ்ட் 20, 21ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் இந்த இக்கட்டான சூழ்நிலையில் மீண்டும் மாற்றுத்திறனாளிகளை பேசு பொருளாக்கும் நோக்கோடு டேட்டா சரிட்டி (DATA Charity), மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் ஆகியன இணைந்து இந்த விளையாட்டு விழாவை முன்னெடுக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் இருந்து (திருகோணமலை ,மட்டக்களப்பு, அம்பாறை ) ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொள்ளும் இந்த விளையாட்டு விழாவுக்கு பிரதான அனுசரணையை அபி டயமன்ட், ராஜ் கிளஸ்டர் மற்றும் லிங்க்ஸ் லீகல் ஆகிய நிறுவனத்தினர் வழங்குகின்றனர்.

மட்டக்களப்பில் இருந்து 26 மாற்றுதிறனாளிகளின் அமைப்புகளும், அம்பாறையில் இருந்து 8 மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்களும், திருகோணமலையில் இருந்து 4 மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்களும் இந்த விளையாட்டு விழாவில் பங்கேற்கின்றன.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மாற்றுத்திறனாளிகளின் அடிப்படைத் தேவையாக உள்ள அனைத்து வசதிகளும் கொண்ட பராமரிப்பு நிலையம் உருவாக்க அனைவரும் இணைந்து உதவிடவேண்டும் என்ற பரப்புரையை இந்த ஆண்டு விளையாட்டு விழாவில் நாம் முன்வைக்கின்றோம்.

தமிழ் 'பரா' விளையாட்டு விழாவானது 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 2017, 2018ஆம் ஆண்டுகளில் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மிக பிரமாண்டமாக நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2020 ஆம் ஆண்டு விளையாட்டு போட்டிகள் நடைபெறவிருந்தன. எனினும், கோவிட் பரவல் காரணமாக இந்தப் போட்டி இடைநிறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியின் முதல் அங்கமாக பார்வை இழந்தவருக்கான கிரிக்கெட் போட்டி நடைபெறும். இதில், மட்டக்களப்பு, யாழ். விழிப்புலனற்றோர் சங்கங்கள் மோதுகின்றன.



## தனஞ்சய, வெண்டர்சேக்கு கோவிட் தொற்று பாதிப்பு

கொழும்பு, ஜூலை 08

இலங்கை டெஸ்ட் அணியில் மேலும் 2 வீரர்கள் கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை அணியின் சகலதுறை வீரரான தனஞ்சய டீ சில்வா மற்றும் சுழல்பந்து வீச்சாளரான ஜெஃப்ரி வெண்டர்சே ஆகியோரே இவ்வாறு தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இன்று காலியில் ஆரம்பமாகும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் தனஞ்சய டி சில்வா மற்றும் ஜெஃப்றி வெண்டர்சே ஆகியோர் இடம்பெற மாட்டார்களென இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு பதிலாக சுழற்பந்து வீச்சாளர்களான பிரபாத் ஜயசூரிய மற்றும் லக்ஷன் சந்தகன் ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், ஏற்கனவே கோவிட் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த அஞ்சலோ மத்தியூஸ் தற்போது அணியில் இணைக்கப்பட்டுள்ளார். மேலும் கோவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ள பிரவீன் ஜயவிக்ரமவும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விம்பிள்டன் ரென்னிஸ் சிமோனா அரையிறுதியில்!

லண்டன், ஜூலை 08

ரென்னிஸின் முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலேப் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தன.

இதில் ஒன்றில், ருமேனியாவின் சிமோனா ஹாலேப், அமெரிக்க வீராங்கனை அமண்டா அனிசிமோவாவுடன் மோதினார். இந்த போட்டியில் ஹாலேப் 6-2, 6-4 என்ற நேர் செற்களில் அனிசிமோவாவை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் கஜகஸ்தான் வீராங்கனை எலெனா ரைபகினா, அவுஸ்திரேலிய வீராங்கனை அஜிலா டாம்ஜனோவிக்குடன் மோதினார்.

இந்த போட்டியில் அஜிலாவை 4-6, 6-2, 6-3 என்ற செற் கணக்கில் வென்று ரைபகினா அரையிறுதிக்கு முன்னேறினார்.





## விம்பிள்டன் ரென்னிஸ் சானியா இணை தோல்வி!

லண்டன், ஜூலை 08

விம்பிள்டன் ரென்னிஸின் அரையிறுதிப் போட்டியில் சானியா இணை தோல்வியடைந்தது.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடக்கிறது. இதில் கலப்பு இரட்டையர் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடந்தது.

இதில், சானியா மிர்சா - மேட் பாவிக் இணை டெசிரே கிராசிக் - நீல் குப்ஸ்கி இணையை எதிர் கொண்டது.

சானியா மிர்சா - மேட் பாவிக் ஜோடி 6-4, 5-7, 4-6 என்ற செற் கணக்கில் தோல்வி அடைந்தது. விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா முதல் முறையாக அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் போராடி வென்றார் ரபேல் நடால்!



லண்டன், ஜூலை 08

பலத்த சவால் தந்த போட்டியில் வெற்றி பெற்று விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினார் ரபேல் நடால்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடக்கிறது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தன.

இதில் ஒன்றில், ஸ்பெயினின் ரபேல் நடால், அமெரிக்காவின் ரெய்லர் பிட்சுடன் மோதினார். ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் முதல் மற்றும் 3ஆவது செற்றை ரெய்லரும், 2ஆவது மற்றும் 4ஆவது செற்றை நடாலும் கைப்பற்றினர்.

இந்த நிலையில் வெற்றியாளரை நிர்ணயிக்கும் 5ஆவது செற்றை நடால் வென்றார். இறுதியில் 3-6, 7-5, 3-6, 7-5, 7-6 (10-4) என்ற செற்கள் கணக்கில் நடால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

## மே. இ. தீவுடனான தொடர் இந்திய அணி அறிவிப்பு!

புதுடில்லி, ஜூலை 08

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு சிகர் தவான் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியா செல்லவுள்ள இந்திய அணி 3 ஒருநாள் போட்டி,5 இருபது - 20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இரு அணிகளும் மோதும் முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில் ஒருநாள் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித் சர்மா, விராட் கோலி, பும்ரா, ரிஷப் பந்த் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் தலைவராக ஷிகர் தவான் நியமிக்கப்ட்டுள்ளார்.

அணி விவரம்: ஷிகர் தவான் ,




ரவீந்திர ஜடேஜா, ருதுராஜ் கெய்க்வாட், ஷுப்மன் கில், தீபக் ஹூடா, சூர்யகுமார் யாதவ், ஷ்ரேயாஸ் ஐயர், இஷான் கிஷன் , சஞ்சு சாம்சன் , ஷர்துல் தாக்கூர், யுஸ்வேந்திர சாஹல், அக்சர் பட்டேல், அவேஷ் கான் , பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ், அர்ஷ்தீப் சிங் (ஐ)

# யாழ். ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் இனி புதிய நடைமுறையில் எரிபொருள்

## வரிசையில் உள்ள வாகன இலக்கங்களை பதிவு செய்ய முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 08

யாழ்ப்பாணம் கச்சேரி அருகிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருக்கும் வாகனங்களின் இலக்கங்களை பதிந்து எரிபொருளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருக்கும் நிலையில் தேவையற்ற காத்திருப்பை தவிர்ப்பதற்காக வாகன இலக்கங்களைப் பதியும் நடைமுறை முதல்கட்டமாக இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பின்பற்றப்பட உள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதிபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன்படி ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருக்கும் முதல் 400 ஓட்டோக்கள் , 100 கார்கள்,1000 மோட்டார் சைக்கிள்களின் வாகன இலக்கங்கள் பதியப்பட்டு எரிபொருள் அந்த ஒழுங்கில் வழங்கப்படும்.

அதேவேளை, அதற்கு மேலாக நிற்கும் வாகனங்களின் இலக்கம், வாகன உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் என்பன பதியப்பட்டு அவர்களுக்கு அடுத்த முறை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கும்போது முதல் நாளே குறுஞ்செய்திச் சேவை ஊடாக தகவல் அளிக்கப்படும்.

அதன் பிரகாரம் அவர்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் நாளில் அவர்களுக்கு எனது ஒதுக்கப்படும் நேரத்தில் வந்து எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும். இதன்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தேவையற்று காத்திருப்பதை தடுக்க முடியும்-என்றார். (அ)

# எரிபொருள் நெருக்கடியை தீர்க்க ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வவுனியா, ஜூலை 08

வவுனியா மாவட்ட எரிபொருள் நெருக்கடி மற்றும் பங்கீடு தொடர்பில் மக்களுக்கு இலகுவான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் அவசர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றதுடன், அதில் எரிபொருள் அட்டை விநியோகிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் மற்றும் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர ஆகியோரின் இணைத் தலைமையில் குறித்த கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.இதன்போது, மாவட்டத்தில் எரிபொருள் நெருக்கடி நிலை தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அதற்கு கறுப்பு சந்தை விற்பனையே காரணம் எனவும் இதன் காரணமாக மாவட்டத்திற்கு கிடைக்கும் பெற்றோல் எரிபொருளைச் சரியான முறையில் பங்கீடு செய்வது தொடாபில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையில் இறுதியில், பெற்றோல் பெறுவதற்கு பிரதேச செயலகங்கள் கிராம அலுவலர் ஊடாக எரிபொருள் அட்டை ஒன்றினை முதல் கட்டமாக குடும்பத்திற்கு ஒன்று வீதம் வழங்கி நடைமுறைப்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கு.திலீபன் தெரிவித்திருந்தார். (அ)

# காரைநகர் வீதி மறியல் நேற்று முடிவுக்கு வந்தது!

யாழ்ப்பாணம், ஜூலை. 08

காரைநகரில் இடம்பெற்ற வீதி மறிப்பு போராட்டம் முடிவுக்கு வந்தது. வாகனங்களின் போக்குவரத்துக்கள் வழமைக்கு திரும்பின.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களுடன் பிரதேச செயலகம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கலந்துரையாடி, வரிசையில் உள்ள வாகனங்களின் இலக்கங்களைப் பதிவு செய்து பம்பி திருத்தப்பட்ட பின்னர் உரிய ஒழுங்கின் அடிப்படையில் எரிபொருள் பெற்றுக் கொள்ள வழி வகை செய்யப்படும் என உறுதியளிக்கப் பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

காரைநகர் - வலந்தலை சந்தியில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் பொறுமை இழந்து நேற்று முன் தினமும் நேற்றும் வீதி மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த சில தினங்களாக பெட்ரோலுக்காக பொது மக்கள் காத்திருந்த நிலையில் , நேற்று முன்தினம் புதன்கிழமை பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வந்திருந்தது.

சில மணி நேரம் எரிபொருளை விநியோகித்த நிலையில் திடீரென விநியோக பம்பி பழுதடைந்துவிட்டதாக கூறி எரிபொருள் விநியோகத்தை நிறுத்தினர்.

அதனால் ஆத்திரமுற்ற மக்கள் நேற்று முன்தினம் முதல் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பழுதடைந்த எரிபொருள் விநியோகப் பம்பியைத் திருத்துவதற்காக அநுராதபுரத்தில் இருந்து வரவேண்டிய பணியாளர்கள் இதுவரை அங்கிருந்து புறப்படவில்லை. அவர்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. வந்து பம்பி திருத்தப்பட்டவுடன் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது.

24 மணித்தியாலங்கள் கடந்த நிலையில் பம்பியைத் திருத்தி எரிபொருள் விநியோகிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டிய மக்கள் நேற்று வியாழக்கிழமையும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தால் காரைநகருக்கும் வெளி இடங்களுக்குமான போக்குவரத்துக்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலையே பிரதேச செயலரின் உறுதி மொழியை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (அ)




## யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் ஈழத்துப் பெரும் தங்கரத வெள்ளோட்ட பெருவிழா

**காலம் : இன்று (08.07.2022) வெள்ளிக்கிழமை**

மாலை 4 மணிக்கு வெள்ளோட்டம் நடைபெற்று அதனையடுத்து மாலைா 6.00 மணியளவில் வசந்த மண்டபூசை நடைபெற்று இரவு 7 மணியளவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகிய தங்கரதத்திலே எழுந்தருளி எல்லாம் வல்ல அம்பிகை அடியார்களுக்கு திருவருள் பாலிக்கவுள்ளார்.



ஈழத்துப் பெரும் தங்கரத உபயகாரர் -
சின்னச்சாமிக் குருக்கள் சண்முகலிங்கம் ஐயர்
அருள்மிகு வீரமாகாளி அம்மன் தேவஸ்தான ஆலய தர்மகர்த்தா


## மரண அறிவித்தல்

மலர்வு 05 - 03 -



உதிர்வு 04 - 07 - 2022

### விஸ்வலிங்கம் குணசிங்கம்

(முன்னாள் கப்பல் துறைமுக ஊழியர்- திருகோணமலை)

யாழ். புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் குணசிங்கம் அவர்கள் 04.07.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,கமலாதேவி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,தயா (Montreal), மலர் (Berlin), ஜெயா (Berlin), விஜயா (Toronto), வசந்தி(Toronto), வதனா(Paris) ஆகி யோரின் பாசமிகு தந்தையும்,Junalyn, சோதிலிங்கம், காலஞ்சென்ற ஜங்கரன், பத்மகிரி, கருனேஸ்வரன்(வர்ணன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்றவர்களான நல்லம்மா, சண்முகம் நாக ரெட்ணம், அருள்ளம்மா(திருமலை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகரெட்ணம்(தும்பாபிள்ளை), மீனாட்சி, வண்ணியசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற இரத்தினராசா, செல்வராசா, சரஸ்வதி, பஞ்சலிங்கம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கவிசன், தயானா, சுவைதா, நீராஜா, சோபிகா, சயிரன், சயிசன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும்,றியானா, லியினா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 10 Jul 2022 6:00 PM - 9:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

தகனம்
Monday, 11 Jul 2022 11:00 AM - 1:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயா - மகள்.

தொடர்புகளுக்கு:
**தயா - மகள்** Mobile : +15148236566
**மலர் - மகள்** Mobile : +493031562800
**ஜெயா - மகள்** Mobile : +4915173071001
**விஜயா - மகள்** Mobile : +14168875676
**வசந்தி - மகள்** Mobile : +16476436041
**வதனா - மகள்** Mobile : +33658504448

## ஐக்கிய...

சர்வகட்சி அரசாங்கம் குறித்து பேசப்பட்டதாகவும், ஆனால், அதில் பங்கேற்பது குறித்து எந்தப் பதிலையும் ரெலோ அறிவிக்கவில்லை என்று சந்திப்பில் பங்கேற்ற கட்சியின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேந்திரன் ஈழநாடுவுக்கு தெரிவித்தார்.

மேலும், சர்வகட்சி அரசில் ரெலோ பங்கேற்குமா என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், “அது குறித்து முதலில் கட்சிக்குள் பேசி முடிவு எடுக்க வேண்டும். அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டும். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவைப் பொறுத்தே சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கேற்பதா இல்லையா என்று தீர்மானிக்கப்படும்”, என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்புக் குறித்து ரெலோ கட்சி விடுத்த செய்திக் குறிப்பில்,

“நாட்டில் எழுந்திருக்கும் தற்போதைய கடுமையான பொருளாதார சிக்கல், அரசியல் சூழ்நிலை, அரசியல் மாற்றத்திற்கான முயற்சிகள், தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்னைகள், அரசியல் யாப்பு விடயங்கள், நாட்டின் நிரந்தர மீட்சிக்கு அரசியல் தீர்வின் முக்கியத்துவம், தொல்லியல் நடவடிக்கைகளினால் ஏற்படும் இன முரண்பாடு என முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன”, என்று தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது என்றும் ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், எதிர்க்கட்சி சார்பில் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் கொரடா புத்திக பத்திரண ஆகியோரும் பங்கேற்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கோட்டா உடன்...

தமிழ் முற்போக்குக் கூட்டணி முழுமையாக பங்கு பெறும். இதன்படி மலையகத் தோட்டங்களில் அன்றைய தினம் பணிகளில் ஈடுபடாமல், அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படி மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தோட்ட வதிவாளர்களைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் கோருகின்றோம்.

அதேபோல் கொழும்பு உட்பட நகரங்களில் வர்த்தக நிலையங்களையும், அலுவலகங்களையும் மூடி, முழுமையாக அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படியும், தமது வேலைத்தள பணியாளர்களையும் அரச எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துகொள்ள இடமளிக்கும்படியும் அனைத்துத் தரப்பினரையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் கோருகின்றோம்-என்றார். (அ)

## எரிபொருள்...

வருகின்றது.

ரஷ்யா - இலங்கை இடையேயான நேரடி விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், இந்தப் பிரதிநிதிகள் இருவரும் பஹ்ரைன் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

நாட்டில் நீடிக்கும் பொருளாதார நெருக்கடியால் எரிபொருள் தட்டுப்பாடு மிகவும் தீவிரமடைந்துள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பல மூடப்பட்டுள்ளன.

ஐ. ஓ. சியின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மாத்திரமே தற்போது எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. இதனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர் வரிசைகளில் பெருந்திரளானோர் நாளாந்தம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், எரிபொருளை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சு நடத்தியது. ரஷ்யாவுடன் நடத்தப்பட்ட பேச்சின் அடுத்த கட்டமாகவே ரஷ்ய அதிகாரிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

## வரிசையில்...

திருந்த ஒருவரே இவ்வாறு மரணமானார். மரணமானவர் நடமாடும் ஐஸ்கிறீம் வியாபாரி என்றும் மொறட்டுவையை சேர்ந்த ஹிலாரி பெர்னாண்டோ (வயது 60) எனவும் அறிய வருகின்றது.

மூன்று நாட்களாக வரிசையில் காத்திருந்த அவர் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மற்றுமொரு முச்சக்கர வண்டியில் களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார்.

இதேவேளை, கொழும்பு - பம்பலப்பிட்டியில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த 60 வயது நபர் ஒருவர் திடீரென சுகயீனமுற்று, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். (ஐ)

## ஐ. எம். எவ்வுடன்...

செய்யப்படுகின்றன. ஊழியர்கள் மட்டத்தில் உடன்பாடு எட்டப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து ஆராய்வதற்காக கடந்த மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் குழு ஒன்று கொழும்பு வந்து திரும்பியிருந்தது. இதையடுத்து பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## குவாட்...

அந்தக் கடிதத்தில், “குவாட் அமைப்பில் அங்கம் வகிக்கும் 4 நாடுகளும் வேண்டுகோள் விடுக்கும்வரை காத்திராமல் இலங்கைக்கு உதவ வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், குவாட்டின் ஆற்றல்கள் வெளிக்காட்டப்படும். இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் குவாட்டின் ஆற்றல்களை வெளிக்காட்ட இலங்கைக்கு உதவுவதில் குவாட் நாடுகள் முன்னிற்க வேண்டும்”, என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ‘இலங்கையின் பொருளாதார நெருக்கடி - கடன் பிரச்னைக்கு ராஜபக்ஷ சகோதரர்களும் சீனாவுமே காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். சகல சமூகங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் இது மாற்றத்துக்கான நேரம் என்பதை வெளிக்காட்ட கிளர்ந்தெழுந்துள்ளனர்.”, என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இலங்கை நெருக்கடி நிலைமையிலிருந்து மீள, “மனிதாபிமான உதவி வழங்கல், எரிபொருட்களை வழங்குதல், நிதிக் கணக்கீடு, சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு - பெரும்பாக பொருளாதார கொள்கை ஆகிய துறைகளில் தொழில்நுட்ப ஆதரவு - ஆலோசனை வழங்கல் என்பவற்றை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதுதவிர, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், போர் குற்றங்கள் குறித்தும் அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டுப் போரின்போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் குவாட் ஒரு பொது நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். குவாட் அமைப்பின் 4 நாடுகளும் இலங்கைப் போரில் இழைக்கப்பட்ட போர் குற்றங்கள் தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை இந்த வருடம் வெளியாகும் போது, ஒன்றிணைந்த நிலைப்பாடு எடுக்க வேண்டும். பொறுப்புக் கூறலுக்கான கடப்பாடு மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதித்தல் தொடர்பில் குவாட்டின் பற்றுறுதியை வெளிக்காட்ட இராஜதந்திர ஐக்கியம் உதவும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# சுகாதாரத்துறையினருக்கு பெற்றோல் வழங்கப்படாது

கொழும்பு, ஜூலை 08

சுகாதார துறை உத்தியோகத்தர்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (சிபெட்கோ) எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக எரிபொருள் வழங்கும் சிறப்பு வேலைத்திட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைமுறைப்படுத்தப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கும் திட்டம் 48 மணித்தியாலங்கள் - இரு நாட்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பொருளாதார நெருக்கடிகள் காரணமாக யாசகம் பெறுவோர் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, ஜூலை. 08

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் அதிகளவான மக்கள் வறியவர்களாக மாறியுள்ளனர்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் யசஞ்சலி தேவிகா ஜயதிலக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை காரணமாக மக்கள் தமது உண்மையான எதிரியை அடையாளம் காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சமூகத்தில் யாசகம் பெறும் மனநிலை அதிகரித்து வருவதாகவும் சிரேஷ்ட பேராசிரியர் யசாஞ்சலி தேவிகா ஜயதிலக்க மேலும் குறிப்பிட்டார். (அ)



# நாளை உணவு நிலையங்களுக்கும் பூட்டு

கொழும்பு, ஜூலை. 08

கொழும்பில் நாளை திட்டமிடப்பட்டுள்ள பாரிய மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அனைத்து உணவு விற்பனை நிலையங்களும் அன்றைய தினம் மூடப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய மற்றும் அவரது அரசாங்கத்தை இராஜினாமா செய்யக் கோரி நாளை கொழும்பில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், அந்த சம்மேளனத்தின் தலைவர் அசேல சம்பத் இந்த விடயம் தொடர்பாக அறிவித்துள்ளார்.

நாளை காலி முகத்திடலை நோக்கிய அரசாங்கத்திற்கு எதிரான பாதயாத்திரையில் சிவில் அமைப்புகளுடன் ஐக் கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட பல்வேறு கட்சிகளும் பங்கெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடமராட்சி...

இறங்கியபோது, மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து அவரை உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

ஆனால், அவர் உயிரிழந்துவிட்டார் என்று அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, அவரின் உடலம் உடல்கூறாய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவரின் மரணத்துக்கு டெங்கு தொற்றின் தாக்கமே காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. (ஐ-2)

## பாண் உற்பத்தி...

இயற்கை அனர்த்தங்கள் உருவாகும் போது எமது உதவியை மாவட்ட செயலகத்தினர் எதிர்பார்க்கின்றனர். ஆனால், தற்போது எம்மை கைவிட்டுள்ளனர். நாம் எமக்கு டீசலை பெற்றுத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் யாரும் செவிசாய்க்கவில்லை.

இந்நிலையில் தொடர்ந்து எம்மால் வெதுப்பாக உற்பத்திகளை செய்ய முடியாது. கறுப்புச் சந்தையில் டீசலைப் பெற்று மக்களுக்கு வெதுப்பக உற்பத்திகளை வழங்க முடியாது. இறுதியாக நாம் டீசலை பெற்றுதரக்கோரி இராணுவத்தினரின் உதவியை நாடவிருக்கின்றோம் - என்று தெரிவித்தனர். (ஐ-3)

## நயினாதீவு...

இவரின் இறுதிக் கிரியைகளை நயினாதீவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அன்னார், உதவி அரசாங்க அதிபராக சேவையாற்றி ஓய்வு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## அரசாங்கத்துக்கு...

கிறிஸ்தவ மதத்தலைவர்கள் உள்ளிட்டோர் இணைந்து நேற்று மாலை இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கொழும்பு புறக்கோட்டையில் ஆரம்பமான இந்தப் போராட்டம் நேற்றிரவு 11 மணியையும் தாண்டி இடம்பெற்றது. (இந்த செய்தி எழுதப்படும்வரை)

நாளை சனிக்கிழமை நாட்டில் இடம்பெறவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றுப் போராட்டங்கள் இடம்பெற்றன.

இதன் ஓர் அங்கமாக, நேற்று கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பௌத்த தேரர்கள் புறக்கோட்டை நோக்கி பேரணி ஒன்றை முன்னெடுத்து சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்தினர்.

இதேவேளை, சிலாபத்திலிருந்து கத்தோலிக்க மத அருட்தந்தையினரும் அருட் சகோதரிகள் உள்ளிட்ட பொது மக்கள் பேரணியை ஆரம்பித்தனர். இந்தப் நேற்ற நீர்கொழும்பை அடைந்தது. இந்தப் பேரணி சனிக்கிழமை கொழும்பு - கோட்டை கோட்டா கோ கமவை வந்தடையவுள்ளது.

இதேபோன்று, கோட்டை ரயில் நிலையத்திலிருந்து இஸ்லாமிய மதத் தலைவர்களான மௌலவிமாரும் பேரணியாக கோட்டா கோ கம நோக்கி செல்லவுள்ளனர்.

நேற்றைய தினம் பல அமைப்புக்களை பிரதி நிதித்துவம் செய்யும் தேரர்கள், கோட்டை ரயில் நிலையத்தில் ஒன்று சேர்ந்து பேரணியாக புறக்கோட்டை - ஒல்கொட் மாவத்தை ஸ்ரீ போதிருக்காராம விகாரைக்கு முன்பாக சென்று அங்கு சத்தியாகிரக போராட்டத்தை ஆரம்பித்த நிலையில், நேற்றிரவும் இந்தப் போராட்டம் தொடர்ந்தது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வரும் 80 பேரின் சொத்துக்களை முடக்க நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை. 08

பாரியளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வரும் 80 பாதாள உலக குற்றவாளிகளின் சொத்துக்களை முடக்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவினரால் இதுதொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த 80 பேரில் பலரும் நாட்டினை விட்டு வெளியேறி தற்போது வெளிநாடுகளில் வசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் இவர்கள் தொடர்பில் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 32 குற்றவாளிகளின் சொத்துக்கள் ஏற்கனவே முடக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு முடக்கப்பட்டுள்ள அதிகளவான சொத்துக்கள் தெமட்டகொட சமிந்த என்ற குற்றவாளிக்கு சொந்தமானது எனவும் அவருக்கு 600 மில்லியனுக்கும் அதிகமான சொத்து இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பாதாள உலக போதைப்பொருள் வியாபாரிகளின் சுமார் 100 கோடி பெறுமதியான சொத்துக்கள் இது வரையான விசாரணைகள் ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

எதிர்காலத்தில் அந்த சொத்துக்களையும் முடக்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## மீண்டும் அவசரகால சட்டம்?

கொழும்பு, ஜூலை 08

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலக கோரி நாளை நடத்தப்படவுள்ள மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்காக, நாடு முழுவதும் அவசர சட்டம் அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன, இராணுவத் தளபதி லியனகே உள்ளிட்டோருடன் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படாத போதிலும், எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## பெண் பொலிஸ்க்கு தொல்லை சக உத்தியோகத்தர் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, ஜூலை 08

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மீது பாலியல் தொல்லை கொடுத்த பொலிஸ் சாரதியை எதிர்வரும் 20ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் நேற்று உத்தரவிட்டார்.

பொலிஸ் நிலையத்தில் பெண்கள் பிரிவில் பெண் பொலிஸ் உத்தியோகத்தராக கடமைறிவரும் பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் அங்கு சாரதியாக கடமையாற்றுபவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து கையைப் பிடித்து பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றஞ்சாட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கொண்டு வந்ததையடுத்து உடனடியாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை பணியில் இருந்து இடைநிறுத்திய துடன் அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு சிரேஸ் பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனை வழங்கியதையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் அம்பாறையைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் பொலிஸ் சாரதியாக கடமையாற்றி வருகின்றார் எனவும் இவரை நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.









## ஜனாதிபதி-கனடா தூதுவர் நேற்று விசேட சந்திப்பு

கொழும்பு, ஜூலை. 08

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கனடா தூது வர் டேவிட் மெக்கினன் ஆகியோருக்கிடையில் விசேட சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - கோட்டையிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## எம்.சி.சி. நிறுவனத்திடம் இருந்து எந்த நிதியுதவி ஏற்பாடும் இல்லை

### அமெரிக்கா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 08

இலங்கைக்கு உதவும் வகையில் மில்லேனியம் செலஞ்ச் கோர்ப்பரேஷன் நிறுவனத்திடம் இருந்து தற்போது எந்த நிதியுதவி ஏற்பாடுகளும் இல்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஏற்கனவே குறித்த திட்டத்தை இலங்கைக்கு வழங்கியபோதும், அதனை ஏற்றுக்கொள்ளாமை ஏமாற்றமளித்தது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தூதர் ஜூலி சுங் கூறியுள்ளார். (அ)

## பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 08

இன்றும் நாளையும் கொழும்பு - கோட்டை, புறக்கோட்டை முதலான பகுதிகளில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களுக்கு தடைவிதிக்குமாறு பொலிஸார் முன்வைத்த கோரிக்கை நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை பொலிஸாரால், கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, கொழும்பு மேலதிக நீதவான் கேமிந்த பெரேராவினால் குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (அ)

## பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இன்னும் ஒன்றரை வருடம் ஆகும்

### கூறினார் பிரதமர் ரணில்



கொழும்பு, ஜூலை. 08

அரசியல் சீர்திருத்தங்களுக்கு இளம் ஆர்ப்பாட்டகாரர்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு அவர்களும் மிகவும் வெளிப்படையான நிலை இருக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அல் ஜசீரா இணையத்தளத்திற்கு வழங்கிய நேர்காணலில் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வர இன்னும் ஒன்றரை வருடங்கள் ஆகும் என பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 - 01 - 1951

மறைவு 06 - 07 - 2022

### திருமதி குணமணி தம்பிராஜா

யாழ். சங்கத்தானை பெரியரசடியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், நோர்வே Stavanger ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட குணமணி தம்பிராஜா அவர்கள் 06.07.2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கார்த்திகேசு, வள்ளிப்பிள்ளைதம்பதிகளின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற தங்கவடிவேல்(Post Master பிரதம தபாலதிபர்), நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா தம்பிராஜா(Post Master வெளிநாட்டு பொதிகைத் திணைக்கள தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சிறீதரன்(சுவிஸ்), ரேணுகா(நோர்வே), மேனகா (நியூசிலாந்து), சசிதரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்துமதி, நந்தரூபன், நகுலகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், தங்கவடிவேல் நவரத்தினவேல்(கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும், ஆகாஷ், அனிஷா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், நிவேதா, சுவேதா(நோர்வே), அபிராம், அஞ்சலா(நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

கிரியை
Monday, 11 Jul 2022 11:30 AM - 1:30 PM
Soma Kapell Sandnesveien 307, 4312 Sandnes, Norway

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
நந்தரூபன் - மருமகன் Mobile : +4799760977
நகுலகுமார் - மருமகன் Mobile : +64211484328
சிறீதரன் - மகன் Mobile : +41786994586
சசிதரன் - மகன் Mobile : +447882535769

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தோரணை
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -யோகா



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு